# நாள் மலர்கள்



T.18589

பாரதிதாசன்



# நாள் மலர்கள்

பாரதிதாசன்

பூம்புகார் பிரசுரம்
109, மன்னார்சாமி கோவில் தெரு,
சென்னை-600 013.

விலை : ரூ. 4-50

பூம்புகார் வெளியீடு எண் : 73
முதற் பதிப்பு : ஏப்ரல், 1978.
உரிமை : புரட்சிக் கவிஞரின் தலைமகள் சரசுவதி—கண்ணப்பன்; மகன் மன்னர் மன்னன்; இளைய மகள் வசந்தா தண்டபாணி ஆகியோர் உரிமை இந் நூல். எவர் இந்த வகையிலும் — வடிவத்திலும் — எவர் இந்தப் பாடல் வரிகளை எடுத்தாள விரும்பினாலும் உரிமை உடையவர்களிடம் முன் இசைவு பெறுதல் வேண்டும்.

அச்சிட்டவர்கள் : மாருதி பிரஸ், சென்னை—600 014.

## பதிப்புரை

ஓர் உண்மைக் கவிஞன் தவிர்க்க முடியாதபடி காலத்தின் குரலாகத் திகழ்கிறான். தன்னுடைய உணர்ச்சிப் பெருக்குகள், விருப்பு வெறுப்புகள், நாட்டங்கள், சிந்தனை முடிவுகள் கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றைக் காலத்தின் குரலோடு மோதவிட்டு எதிரொலிக்கிறான் என்பார், ஜீவா.

மேற்கண்ட இந்தப் பேருண்மை, மக்களைப் பற்றி மட்டுமல்ல, மக்களுக்காகவும் பாடிய பாவேந்தருக்கு மிகமிகப் பொருந்தும்.

பாவேந்தர் காலத்தின் குரல் மட்டுமன்று; கண்ணாடியாகவும் திகழ்ந்தார். அரிமா இல்லாத இடத்தில் நரிமாக்களின் ஊளை பெரு முழக்கமாகவும்; சருக்கரை இல்லாத ஊரில் இலுப்பைப்பூ சருக்கரையான கதைபோல இருந்த பாட்டுலகத்தைப் பாரதிதாசன் எழுதுகோலால் ஆங்காங்கு நடைபெறும் செய்திகளையெல்லாம் தன் கண்ணோட்டத்தில் பண்ணோட்டம் விட்டார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு என்பது—அரசியல்; செய்திகள் சிந்தனை உலைக் கூட்டத்தில் சென்று புதுவார்ப்பு பெற்று வருவது இலக்கியம்.

இரும்பைப் பொன்னாக்கும் கலையே பாவேந்தரின் நாள்தோறும் ஊர் நிகழ்ச்சி முதல் உலக நிகழ்ச்சி வரை பாட்டு வடிவம் பெற்று இலக்கிய இருப்பிடத்தை எட்டிப் பிடித்தன.

'நாள் மலர்கள்', ஊர், நாடு, உலகம் காட்டிய நிகழ்ச்சிகளின் எதிரொலி கருத்துச் செப்பேடுகள், கலைமெருகேற்றிய கவிதை; கல்வெட்டுகள்.

இவற்றைத் தொகுத்துக் கொடுத்தவர் திரு த. கோவேந்தன்; அவர்க்கும் நூலாக்கி வெளியிட உரிமை தந்த பாவேந்தர் குடும்பத்தினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழர் பயன் கொள்க.

—பூம்புகார் பிரசுரம்

## இந்த மலர்கள்

எழுத்துப் பணியில் பகல் முழுவதும் ஈடுபட்டு, இரவிலும் கண்விழித்துக் கொண்டிருந்து தன் பணியைத் தொடர்ந்து விட்டுச் சற்று நேரமே கண் அயர்ந்தாலும், கதிர் ஒளி பரவுமுன்னே துயில் நீங்கி விடும் பழக்கம் உடையவர் பாவேந்தர்.

அவரே எழுந்துவிட்ட பின்னர் குடும்பத்தில் மற்றவர் தூங்கிக் கொண்டிருக்க முடியுமா என்ன?

கலகலப்பு உண்டாகிவிடும்; சுவைநீர் சுடசுடப் பருகிய உடனே நாளிதழ் படித்தாக வேண்டும்.

மிகவும் கூர்ந்து படிப்பார். நாளிதழ் படித்து முடியும் நேரம் யாரேனும் வந்து விட்டால் அன்றைய செய்திகள் குறித்துத் தம் கருத்துகளை வெளியிடுவார்.

உலகின் எந்தப் பகுதியிலிருந்து வந்த செய்தியாக இருந்தாலும், அதிலே அவருக்கு ஏற்பட்ட வியப்பை — அதிர்ச்சியை — எதிர்ப்பை அல்ல ஆதரவை — எதுவானாலும் வெளிப்படையாகப் பளீரெனச் சொல்லுவார். அரசியல் தலைவர்களின் கருத்துகளில் இவருக்கு ஏற்படும் வேறுபட்ட மதிப்பீட்டைக் காரசாரமாகச் சொல்ல எப்போதும் தயங்கியதே இல்லை,

முப்பதாண்டுகட்கு முன்பு ஓர் நாள்; வானொலி யில் ஏதோ நிகழ்ச்சி; மணிக்கொடி எழுத்தாளர் ஒருவர் சில கடுமையான கருத்துகளை வெளியிட்டார்; நான் கேட்டுக் கொண்டிருந்தேன். வானொலிப் பெட்டியருகில் நின்று! அழைத்த குரல் கேட்டு ஓடி னேன்; நிகழ்ச்சியைப் பற்றி வினவினார்; பேசியவர் பெயரையும், தாக்குதலாக அவர் சொன்னதையும் சுருக்கமாகத்தான் சொன்னேன்; கண் இமைக்கும் நேரத்தில் என்னிடம் துண்டுத்தாள் ஒன்றை அளித் தார், எரிமலை வெடித்திருந்தது எழுத்துருவில்!

"குயில்" இதழில் அப்படியே வெளியிட்டோம்.

மிக நெருக்கமான அந்த 'நண்பர்' கக்கிய நஞ்சுக்கு நல்ல முறிவு. அவ்வளவுதான்!

காதால் கேட்ட வானொலி நிகழ்ச்சிக்கே மறுப் புரை இப்படி அமைந்ததென்றால், ஏடுகளில் வரும் செய்திகளைப்பற்றிக் கேட்க வேண்டுமா?

"செய்திகளைப் படித்துக் கொண்டு வரும்போதே அதைப் பற்றிய நம் கருத்தையும் உருவாக்கிக் கொண்டு விடவேண்டும். அதைப்பற்றிப் பலரிடம் உரையாடிப் பார்க்க வேண்டும். செய்தியைப் படித்து, உதறித் தள்ளிவிடுவது அன்று எழுத்தாள ரின் வேலை" என்பார்.

அன்றன்று கிளம்பும் செய்திகளை மையமாகக் கொண்டு கவிதை புனைவதில் அவருக்குத் தனி இன்பம்!

கஜராஜ்—சரோஜாவின் "காதற் பெருமை" கவிதை அப்படி உருவானதே!

எண்ணற்ற கவிதைகள் இப்படி படைக்கப் பட் டுள்ளன. எழுதப்படும் ஒவ்வொன்றும் இனிப்பாகத்

தானிருக்கும்—என்று சொல்ல முடியாது. கசப்பாகவோ, உரைப்பாகவோ இருக்கக்கூடும்!

"இத்தனும் தேதி, இன்னுரைப் பாராட்டியிருக்கிறுரே அதற்கப்புறம் தாக்கியிருக்கிறுரே!" என்று சில நேரங்களில் சிலர் மனம் வெதும்பியதும் உண்டு. இவர்மீது பாய்ந்ததும் உண்டு. குறிப்பிட்ட ஒரு செய்திக்காகத் தம் பாராட்டைத் தெரிவித்து விட்டதனுலேயே, தவருன போக்கினைக் கண்டால் சுட்டிக் காட்டலாகாது என்று நினைத்து விடுவதா? "எதையுமே பாரட்டிக் கொண்டேயிருக்க வேண்டும் என்ருல், அவன் கவிஞன் அல்லன்; கூலி" என்பார். இதனை உணராமல்தான் முன்னுக்குப் பின் முரணுனவை எனச் சிலர் வாதிடுவது வழக்கம். சில காலம் கழிந்த பின்னர் பாவேந்தர் கருத்தே சரியானது என ஒப்புக் கொண்டதும் வழக்கமே!

பண்டைக் காலத்தில் ஆண்டவனைப் பற்றிப் பாடி அரசர்களிடம் பரிசில் பெற்ருர்கள் பாவலர்கள்; பின்னர், "ஆண்டவனே நீவிர்!" என்று அரசர்களையும், சிற்றரசர்களையும், நிலக் கிழார்களையும் பாடித் தொகை பெற்றனர்.

இது பாவேந்தரின் காலம்; மக்கட் சமுதாய மேம்பாட்டுக்காக முழக்கமிட்ட பாவேந்தர், மந்தப் போக்கில் நடைபோட ஒப்பமாட்டாரர். மக்களின் நலன்களுக்கான கருத்தைத் தட்டாமல், தயங்காமல் சொல்ல வேண்டியது தம் கடமை என உணர்ந்தார்—அதனுலன்ருே உயர்ந்தார்?

அன்றன்று கிடைத்த செய்திகளைச் சுற்றியோ, தம் கருத்தைக் - கவர்ந்த நிகழ்ச்சிகளை நினைவுறுத்தியோ பாவேந்தர் புனைந்த பாடல்கள், அவரின் நெஞ்சத் தோட்டத்திலே பூத்த "நாள் மலர்கள்" ஆகும்.

அத்தனை மலர்களும் சமுதாயப் பிணி தீர்க்கும் மருந்துகளே என்பதையும், பாவேந்தரின் நெஞ்ச மலர் சமூகக் கேடுகளைத் தீய்க்க மலர்ந்த நெருப்பு மலர் என்பதையும் இந்தப் பாடல் தொகுதி புலப் படுத்தும்.

நாம் படித்துப் பயன்பெற வெளியிட்டுதவிய பூம்புகாருக்கு நன்றி கூறுகிறோம்!

*10-3-78*
புதுச்சேரி

சு. மன்னர் மன்னன்

பாவலர் வாழ்க்கை பயன்மரம், ஊருணி
யாவரும் கொள்வீர் இனிது.

# பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்புகள்

**1891 —** ஏப்ரல் 9, புதன் இரவு 10·15 மணிக்குப் புதுவையில் சுப்புரத்தினம் பிறந்தார். தந்தை கனகசபை. தாய் இலக்குமி. உடன் பிறந்தோர்: தமையன் சுப்பராயன், தமக்கை சிவகாம சுந்தரி, தங்கை இராசாம்பாள்.

**1895 —** ஆசிரியர் திருப்புளிசாமி அய்யாவிடம் தொடக்கக் கல்வி. இளம் வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்றார். பாட்டிசைப்பதிலும் நடிப்பதிலும் ஊரில் நற்பெயர் பெற்றார். பதினாம் வயதிலேயே சுப்புரத்தினத்தைப் பெற்றதால் புகழ் பெற்றது புதுவை.

**1908 —** புதுவை அருகில் உள்ள சாரம் முதுபெரும் புலவர் (மகா வித்துவான்) பு. அ. பெரியசாமியிடமும், பின்னர், பெரும்புலவர் பங்காரு பத்தரிடமும், தமிழ் இலக்கண–இலக்கியங்களையும், சித்தாந்த–வேதாந்த பாடங்களையும் கசடறக் கற்றார். மாநிலத்திலேயே முதல் மாணவராகச் சிறப்புற்றார். புலவர் சுப்புரத்தினத்தை, வேணு (வல்லூறு) நாயகர் வீட்டுத் திருமணத்தில் பாரதியார் காணும் பேறு பெற்றார். பாரதியாரின் தேர்வுத் 'தராசி'ல் நின்றார்; வென்றார் நட்பு முற்றியது; பாரதியார்க்கிருந்த இலக்கண–இலக்கிய அறியாமை இருள் வற்றியது; பாரதியாரின் எளிய தமிழ், புலமை மிடுக்கேறிய சுப்புரத்தினத்தைப் பற்றியது.

**1909 —** கல்வி அதிகாரி கையார் உதவியால், காரைக்கால் சார்ந்த நிரவியல் ஆசிரியப் பணி ஏற்றல்.

**1910 —** வ. உ. சி.யின் நாட்டு விடுதலை ஆர்வத்தால் கனிந்திருந்த புலவர்—பாரதியார், வ. வே. சு., டாக்டர். வரதராசுலு, அரவிந்தர் போன்றோர்க்குப் புகலிடம் அளித்தல். தம் பெற்றோர்க்குத் தெரியாமல் மேல் துண்டில், வடித்த சோறு கொடுத்தல். ஓரோர்

அமையங்களில் செலவுக்குப் பணம் தருதல். காவல் நாய்களின் வேட்டையிலிருந்து தப்ப உதவல். பாரதியாரின் 'இந்தியா' ஏட்டை மறைமுகமாகப் பதிப்பித்துத் தருதல். ஆஷ் கலெக்டரைச் சுட்ட துப்பாக்கி பாவேந்தர் அனுப்பியதே.

1916 — தந்தையார் (23–1–16) இயற்கை எய்தல்.

1918 — பாரதியாருடன் நெருங்கிப் பழகிய பழக்கத்தால், சாதி, மதம் கருதாத தெளிந்த உறுதியான கருத்துகளால் ஈர்ப்புற்றுப் புலமைச் செருக்கும் மிடுக்கும் மிகுந்த நடையில் எழுதும் தேசிய, தெய்வப் பாடல்களைப் பழகு தமிழில் எழுதுதல். புதுவை, தமிழக ஏடுகளில், புதுவை. கே. எஸ் ஆர்; K. S. R., கண்டெழுதுவோன். கிறுக்கன், கிண்டல்காரன், கே எஸ். பாரதிதாஸன், என்ற பெயர்களில், பாடல், கட்டுரை, கதை, மடல்கள் எழுதுதல். 10 ஆண்டுக் காலம் பாரதியார்க்கு உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் தோழனாய் இருந்தார்.

1919 — திருபுவனையில் ஆசிரியராக இருக்கையில் பிரெஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என்று குற்றம் சாட்டி $1\frac{1}{4}$ ஆண்டு சிறை பிடித்த அரசு, தவறுணர்ந்து விடுதலை செய்தது. வேலை நீக்க, வழக்கில் புலவர் வென்று மீண்டும் பணியில் சேர்தல்.

1920 — இந்திய விடுதலை அறப்போராட்டத்தில் பங்கேற்றல். புவனகிரி பெருமாத்தூர் பரதேசியார் மகள் பழனி அம்மையை மணத்தல். தம் தோளில் கதர்த் துணியைச் சுமந்து தெருத் தெருவாய் விற்றல்.

1921 — செப்டம்பர் 19—தலைமகள் சரசுவதி பிறப்பு. (12–9–21) பாரதியார் மறைவு.

1922 — K. S. பாரதிதாஸன் என்ற புனைபெயரைத் தொடர்ந்து பயன்படுத்தி, தேச சேவகன்; 'துய்ப்ளேக்சு', 'புதுவை கலைமகள்' தேசோபகாரி 'தேச பக்தன்' 'ஆனந்தபோதினி' 'சுதேசமித்திரன்' இதழ்களில் தொடர்ந்து பாடல், கட்டுரை, கதைகள் எழுதுதல்.

1924 — சோவியத்துநாட்டு மாவீரர் இலெனின் இழப்பிற்குப் பாடல்.

1926 — ஸ்ரீ மயிலம் சுப்ரமணியர் துதியமுது—நூலால் சித்துக்குத் தந்தையாதல்.

1928 — நவம்பர்-3, கோபதி (மன்னர் மன்னன்) பிறப்பு. தன்மான (சுயமரியாதை) இயக்கத்தில் பெரியார் ஈ. வே. ராவுடன் இணைதல். தாமும் தம் குடும்பமும் பகுத்தறிவுக் கொள்கையை மேற்கொளல். குடும்பத் திருமணங்களில் தாலியைத் தவிர்த்தல்.

1929 — 'குடியரசு', 'பகுத்தறிவு' ஏடுகளில் பாடல், கட்டுரை, கதை எழுதுதல்; குடும்பக் கட்டுப்பாடுபற்றி இந்தியாவிலே முதன்முதல் பாட்டெழுதிய முதல் பாவலர் என்ற சிறப்புப் பெறல்.

1930 — பாரதி, புதுவை வருகைக்கு முன்னும் பின்னும் பாடிய, சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்; தொண்டர் நடைப்பாட்டு; கதர் இராட்டினப் பாட்டு நூல் வடிவில் வெளியிடப்பட்டன. தொடர்ந்து சஞ்சீவி பர்வதத்தின் சாரல்; தாழ்த்தப்பட்டார் சமத்துவப்பாட்டு நூல்களை ம. நோயேல் வெளியிடல். டிசம்பர் 10–ல் 'புதுவை முரசு' கிழமை ஏட்டின் ஆசிரியர் பொறுப்பேற்றல்.

1931 — 'புதுவை முரசு' (5–1–31) ஏட்டில் செவ்வாய் உலக யாத்திரை-கட்டுரை வரைதல். சுயமரியாதைச் சுடர் என்று 10 பாடல்களைக் கொண்ட நூலைக் கிண்டற்காரன் என்ற பெயரில் வெளியிடல். (குத்தூசி குருசாமிக்கு இந்நூல் படைப்பு) 18-8–41 இரண்டாம் மகள் வசந்தா (வேனில்) பிறப்பு. பள்ளி ஆண்டு விழாவில் 'சிந்தாமணி' என்ற முத்தமிழ் நாடகம் எழுதி இயக்குதல்.

1932 — வாரிவயலார் வரலாறு அல்லது கெடுவான் கேடு நினைப்பான்—புதினம் வெளியிடல். வெளியார் நாடகங்கட்கும், தன்மான, பொதுவுடைமைக் கூட்டங்களுக்கும் பாட்டெழுதித் தருதல்.

1933 — ம. சிங்காரவேலர் தலைமையில் சென்னை ஒயிட்சு நினைவுக் கட்டடத்தில் (31-1–33) நடந்த நாத்திகர் மாநாட்டில் கலந்துகொண்டு வருகைப் பதிவேட்டில் 'நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்' என்று எழுதிக் கையெழுத்திடல்.

1933 — மூன்றும் மகள் ரமணி பிறப்பு.

1934 — மாமல்லபுரத்திற்கு முழுநிலா இரவில் தோழர் ப. ஜீவானந்தம், குருசாமி, குஞ்சிதம், ந. ரா. சுப்பிரமணியம், மயிலை. சீனி. வேங்கடசாமி, மாயூரம் நடராசன், சாமி சிதம்பரனார், எஸ். வி. லிங்கம், நாரண துரைக்கண்ணனுடன் படகில் செல்லல்; 'மாபலிபுரச் செலவு,—பாடல் பிறந்தது. 9-9-34—ல் இரணியன் அல்லது இணையற்ற வீரன் நாடகம் பெரியார் தலைமையில் நடைபெறல். (குருசாமி இரணியன்—திருவாசகமணி. கே. எம். பாலசுப்பிரமணியம்—பிரகலாதன்)

1935 — இந்தியாவின் முதல் பாட்டேடான—'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம்' தொடக்கம். இதற்கு உறுதுணையாக இருந்தவர். எஸ். ஆர். சுப்பிரமணியம் (சர்வோதயத் தலைவர்.)

1936 — பெங்களூரில் பதினைந்து நாள் தங்கி (1—4-36) 'தேசிங்குராஜன்' வரலாற்றை அட்கின்சு குழுமத்தார்க்கு இஸ் மாஸ்டர் வாய்ஸ் இசைத்தட்டுகளைப் பதித்தல்.

1937 — புரட்சிக்கவி—குறுங்காவியம் வெளியிடல். 'பாலாமணி அல்லது பக்காத் திருடன்' திரைப்படத்திற்குக் கதை, உரையாடல், பாடல் எழுதுதல். இதில் நடித்தவர்கள்: தி. க. சண்முகம் உடன் பிறந்தோர் அனைவரும்.

1938 — பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியைக் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி வெளியிட்டனர். பொருளுதவி செய்தவர் கடலூர் தி. கி. நாராயணசாமி (நாயுடு). தமிழிலக்கியத்திலேயே பெரும் புரட்சியை உண்டாக்கியதால், பெரியார், "தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்" என்று பாராட்டினார். டாக்டர். மாசிலாமணியார் நடத்திய 'தமிழரசு' இதழில் தொடர்ந்து எழுதுதல். தமிழுக்கு அமுதென்று பேர் என்ற பாடலை அச்சுக் கோத்தவர் பின்னாளில் சிறப்புற்ற எழுத்தாளர் 'விந்தன்'.

1939 — 'கவி காளமேகம்'—திரைப்படத்திற்குக் கதை—உரையாடல் பாடல் எழுதுதல். இரணியன் அல்லது இணையற்ற வீரன் நூல் வடிவில் வருதல்.

1941 — எதிர்பாராத முத்தம்—காவியம், காஞ்சி பொன்னப்பாவால் வானம்பாடி நூற்பதிப்புக் கழகத்தில் வெளியிடல். இதற்கு மேலட்டை ஓவியம் இராய் சௌத்திரி.

1942 — குடும்ப விளக்கு I வெளியிடல். இந்தியப் போராட்ட எழுச்சியை மறைமுகமாக ஊக்குவித்தல். இரண்டாம் உலகப்போரை—இட்லரை எதிர்த்தல். பல ஏடுகட்கும் எழுதுதல்.

1943 — பாண்டியன் பரிசு—காவியம் வெளியிடல்.

1944 — பெரியார் முன்னிலையில் தலைமகள் சரசுவதி திருமணம். மணமகன் புலவர் கண்ணப்பர். 'இன்ப இரவு' (புரட்சிக்கவி) முத்தமிழ் நாடகம் அரங்கேற்றம். இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு, (நாடகம்) அழகின் சிரிப்பு ஆகிய நூல்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வெளியிடல். 'சதிசுலோசனா' என்ற திரைப்படத்திற்குக் கதை, உரையாடல் பாட்டு எழுதுதல். குடும்ப விளக்கு II வெளியிடல், செட்டி நாடு முழுதும் இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்திப் பகுத்தறிவு இயக்கத்தைக் காலூன்றச் செய்தல். கலைவாணர் என். எஸ். கே. வுக்காக 'எதிர்பாராத முத்தம்'—நாடகமாகத் தீட்டித் தருதல். 'கற்கண்டு' 'பொறுமை கடலினும் பெரிது' இணைத்து எள்ளல் நூல் வெளியிடல்.

1945 — புதுவை, 95, பெருமாள் கோயில் தெரு வீட்டை வாங்குதல். தமிழியக்கம் (ஒரே இரவில் எழுதியது), 'ஏது இசை' நூல்கள் வெளியிடல்.

1946 — 'முல்லை' இதழ் தொடங்கப்பட்டது. அமைதி—ஊமை நாடகம் வெளியிடல். (29-7-46) பாவேந்தர் 'புரட்சிக்கவி' என்று போற்றப்பட்டு ரூ. 25000—கொண்ட பொற்கிழியை, நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பொன்னுடை போர்த்தி, அறிஞர் அண்ணா திரட்டித் தந்தார். தமிழகப் பேரறிஞர்கள் அனைவரும் வாழ்த்திப் பேசினர்.

8-11-46-ல் முப்பத்தேழாண்டு தமிழாசிரியர் பணிக்குப்பின் பள்ளியிலிருந்து ஓய்வு பெறுதல்.

1947 — புதுக்கோட்டையிலிருந்து குயில் 1, 2 மாத வெளியீடு. 'சௌமியன்' நாடக நூல், பாரதிதாசன் ஆத்திசூடி வெளியிடுதல், சென்னையில் 'குயில்' இதழ்; 'ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி' திரைப் படக் கதை, உரையாடல், பாட்டு தீட்டல், இசையமுது வெளியிடல். புதுவையிலிருந்து 'குயில்' ஆசிரியர்—வெளியிடுபவர். 'கவிஞர் பேசுகிறார்' சொற் பொழிவு நூல்.

1948 — காதலா கடமையா? காவியம்; முல்லைக்காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள் (உரை நாடகம்) கடல் மேற்குமிழிகள் காவியம்; குடும்ப விளக்கு iii; திராவிடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட கரடி நூல் வெளியிடல். 'குயில்' மாத ஏட்டிற்குத் தடை; நாளேடாக்கல். கருஞ் சிறுத்தை உருவாதல்.

1949 — பாரதிதாசன் கவிதைகள் 2 ஆம் தொகுதி; சேர தாண்டவம் (முத்தமிழ் நாடகம்); தமிழச்சியின் கத்தி காவியம், ஏற்றப் பாட்டு, வெளியிடல்.

1950 — குடும்ப விளக்கு iv; குடும்ப விளக்கு v வெளியிடல்.

1951 — செப்டம்பர் 15. ல் வேனில் (வசந்தா தண்டபாணி திருமணம். அமிழ்து எது; கழைக் கூத்தியின் காதல்- வெளியிடல்.

1952 — 'வளையாபதி' திரைப்படம் கதை, உரையாடல் பாட்டு. இசையமுது இரண்டாம் தொகுதி வெளியிடல்.

1954 — பொங்கல் வாழ்த்துக் குவியல்; கவிஞர் பேசுகிறார் சொற்பொழிவு நூல் வெளிவரல், குளித்தலையில் ஆட்சி மொழிக் குழுவிற்குத் தலைமை ஏற்றல்.

1954 — 7-2-1954 மூன்றும் மகள் ரமணி-சிவசுப்ரமணியம் திருமணம்.

1955 — புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றியுற்று அவைத் தலைமை ஏற்றல். சூன் 26-ல் மன்னர் மன்னன்—மைசூர் வீ. சாவித்திரி திருமணம். கோவை. அ. அய்யர்முத்து தலைமை. பாரதிதாசன்

கதைகள், பாரதிதாசன் கவிதைகள் – மூன்றும் தொகுதி வெளியிடல்.

*1956* — தேனருவி—இசைப்பாடல்கள் வெளியிடல்.

*1958* — தாயின்மேல் ஆணை; இளைஞர் இலக்கியம் வெளியிடல். தமிழகப் புலவர் குழுவின் சிறப்புறுப்பினராதல். 'குயில்' கிழமை ஏடாக வெளிவருதல்.

*1959* — பாரதிதாசன் நாடகங்கள்; குறிஞ்சித்திட்டு காவியம் வெளியிடல்; பிசிராந்தையார் முத்தமிழ் நாடகம் தொடர்தல்; 1–11–59 முதல் திருக்குறளுக்கு வள்ளுவர் உள்ளம் என்ற உரை விளக்கம் எழுதுதல்.

*1961* — சென்னைக்குக் குடி பெயர்தல். பாண்டியன் பரிசு—திரைப்படம் எடுக்கத் திட்டமிடல். செக் நாட்டு அறிஞர் பேரா. கமில்சுவலபில் செக் மொழியில் பெயர்த்த பாவேந்தரின் பாடல்களைக் கொண்ட நூலைப் பெறுதல். ஜஸ்டிஸ். எஸ். மகராசன்நட்புறவு.

*1962* — சென்னையில் மீண்டும் 'குயில்' கிழமை ஏடு (15–4-62)அனைத்துலகக் கவிஞர்' மன்றத் தோற்றம், கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா. வெளியிடல். தமிழ் எழுத்தாளர் சங்கம் சார்பில் இராசாசி பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கல்.

*1963* — தோழர் ப. ஜீவானந்தம் மறைவு குறித்துப் 'புகழ் உடம்பிற்குப் புகழ்மாலை' பாடல் எழுதுதல், சீனப் படையெடுப்பை எதிர்த்துத் அனைத்திந்திய மக்களை வீறு கொண்டெழப் பாடல்கள் எழுதுதல், பன்மணித்திரள் நூல் வெளியீடு. 72-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா. வழக்கறிஞர் வி. பி. இராமன் தலைமையில் நடைபெற்றது. 'பாரதியார் வரலாறு' திரைப்படம் எடுக்கத் திட்டமிட்டு எழுதி முடித்தல். இராசிபுரத்தில் புலவர் அரங்கசாமி கூட்டிய கவிஞர்கள் மாநாட்டில் தலைமை ஏற்றல்.

*1964* — பாரதியார் வரலாற்றுத் திரைப்படத்திற்குத் தீவிர முயற்சி. சென்னை பொது மருத்துவ மனையில் ஏப்ரல் 21–ல் இயற்கை எய்தல். மறுநாள் புதுவை கடற்

கரையில் உடல் அடக்கம். வாழ்ந்த காலம் 72ஆண்டு 11 மாதம் 28 நாள்.

1965 — ஏப்ரல் 21. புதுவை கடற்கரை சார்ந்த பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபம், புதுவை நகராட்சியினரால் எழுப்பப் பட்டது.

1970 — மார்ச் கவிஞரின் 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கு சாகித்ய அகாதமி ரூ. 5000 பரிசு வழங்கியது.

1970 — சனவரி ரமணி மறைவு.

1971 — ஏப்ரல் 29 பாவேந்தரின் பிறந்தநாள் விழா புதுவை அரசு விழாவாகக் கொண்டாடப் பெற்றது. ஒவ்வோ ராண்டும் அரசு விழா நிகழ்கிறது. பாவேந்தர் வாழ்ந்த பெருமாள் கோயில்தெரு 95ஆம் எண் இல்லம் அரசுடைமையாயிற்று. அங்கே புரட்சிக் கவிஞர் நினைவு நூலகம்,—காட்சிக் கூடம் நடந்து வருகிறது.

1972 — ஏப்ரல் 29, பாவேந்தரின் முழு உருவச்சிலை புதுவை. அரசினரால் திறந்து வைக்கப்பெற்றது.

— ச. மன்னர் மன்னன்

## எனது நன்றி

என் தமிழ்க் கவிதைத் தொண்டும்
இனியதோ? நான் பிறந்த
முன்னாள் நன்னாளோ? என்னை
முதிர் அன்பால் வாழ்த்தல் நன்றோ?
இன்னும்நான் பன்னாள் வாழ்ந்தால்
என்னால் இப் பொன்னாட்டார்க்கே
என்னதாம் நன்மை? என்ப
தெனக்கேதும் விளங்கவில்லை

*  *  *

மலாயாவில் அங்கங்கேயும்!
மன்னிய நிறுவனத்தார்
பலரும் என் பிறந்த நாளில்
பகர்ந்தனர் எனக்கு வாழ்த்து!
நிலவிய அன்புத் தோழர்
நேர்உற வாழ்த்துச் சொன்னார்
அலைகடற் கப்பால் வாழ்வார்
அன்பால் என் அகத்தில் வாழ்வார்!

*  *  *

ஊக்கத்தை எனக்க ளித்தார்
உயர்மலா யாவில் உள்ளார்
தூக்கத்தில் பிதற்ற நேர்ந்தால்
தாய்தமிழ் வாழ்த்த என்வாய்
ஆக்கத்தை எனக்கிந் நாட்டார்
அளித்திட்ட அளவையெல்லாம்
செலவிடக் கடமைப் பட்டேன்.

மலாயாவின் தோழர்க் கெல்லாம்
மனமார்ந்த நன்றி! அன்னார்
கலேயாத அன்பி னேடும்
கலந்துற வாகிச் செல்வம்
தலேயான தென்றே எண்ணித்
தக்கதாம் வழியிற் றேடிச்
செலவு மட்டாகச் செய்து
செந்தமிழ் போற்றி வாழ்க!

[பிறந்த தினத்தையொட்டி மலாயாவிலிருந்து வாழ்த்துத் தந்திகளும், பாராட்டுச் செய்திகளும் அனுப்பிய அன்பர்களுக்குக் கவியரசர் பாரதிதாசன் அவர்கள் தெரிவித்த நன்றியறிதல்.]

1947—"தமிழ்முரசு" சிங்கப்பூர்

# சென்னை மாகாணத் தமிழாசிரியர்

மூன்றுவது மாநாட்டுக்கு
அனுப்பிய வாழ்த்து!

தமிழா சிரியர் மாநாடு வாழ்க!
தகுமவர் நோக்கங்கள் வெல்க!
அமுதே நிகர்த்த தீந்தமிழ் தன்னை
இளைஞருக் கருத்துவார் தம்மை
நமதா ளவந்தார் மதிப்பதே இல்லை
நன்றுன ஒற்றுமை பெற்றே
"எமதா ணையேற்பீர் ஆளவந்தாரே
இல்லையேல் வீழ்விரெ"ன் றுரைக்க.

உரிய தாய்மொழி மக்களுக் கீவோரி
நாட்டினுக் குயிரினை ஒப்பார்
அரிய நற்செயல் செய்பவர் மக்கட்
கறிவினை யூட்டுவா ராவார்.
பிரித லின்றி ஆசிரியர்கள்
ஒற்றுமைப் பேற்றினை எய்திப்
பெரியார் என்று தாம்சுமை என்னும்
பிற்போக் காளரை வீழ்த்த!

தமிழர் நாட்டைத் தமிழரே ஆள்க
தமிழரால் வணங்கிடத் தக்கோர்
தமிழாசிரியரே! இந்நிலை இந்நாள்
தளரினும், தழைத்திடும் நாளை!
இமய வெற்பில் தம்பெயர் பொறித்த
இனத்தர் நாமென உணர்க!
அமைதி மாய்க்கும் வடவர்தம், பிடி
அகலுக நாளும்வா ழியவே.

குயில் 1–6–48

# அரசியல் வகையின்
# அயல்மொழிப் பெயர்கள்

**சோசலிசம்**

இரண்டு கறவைகள் உன்னிடம் இருந்தால்
அண்டை வீட்டானுக் கொன் றளித்தல் "சோசலிசம்."

**காப்டலிசம்**

கறவைகள் இரண்டில் கடிதொன்றை விற்றுக்
காளை வாங்குவது "காப்டலிசமாம்,"

**கம்யூனிசம்**

அவ்விரண்டினையும் ஆள்வார்க்கு விற்றுத்
தேவைக்குப் பால்பெறச் செப்பல் "கம்யூனிசம்."

**பாசிசம்**

பகர் இரு கறவையைப் பறித்த ஆள் வோரிடம்
தொகைதந்து பால் பெறச் சொல்வது "பாசிசம்."

**நாசிசம்**

உரியவன் தன்னை ஒழித்தே அவனின்
கறவையிரண்டையும் கைப்பற்றல் "நாசிசம்."

**நியூடிலிசம்**

இரண்டு கறவையால் திரண்டபால் அனைத்தையும்
சாக்கடைக் காக்குவது தான் "நியூடலிசம்."

அதனை இவற்றில் ஏற்பாய்.
அதனை உன் நாட்டுக் காக்குக தோழனே!

குயில் 1–7–47

# மருத்துவர் வீட்டில் அமைச்சர்

மருத்துவர் : வாங்க வாங்க நீங்க ஆரு

அமைச்சர் : கல்வி அமைச்சன் நான்! கண்ணு தெரியலே

மருத்துவர் : வாங்க வாங்க நீங்க தானு?
என்ன சேதிங்க?

அமைச்சர் : இன்ன நோயின்னே இன்னும் புரியலே
கையை பாருங்க கருத்தா!

(மருத்துவர் நாடியைப் பார்க்கிருர்)

மருத்துவர் : தானே வந்த நோய் அல்ல. தேடி நீங்க
சேத்த நோய் தானுங்க.

அமைச்சர் : இந்த நோய்க்குப் பேர் இன்னதிண்ணில்லையா?

மருத்துவர் : இருக்கிற குறிப்பே எடுத்துச் சொல்றேன்: நாக்கிலே துடுக்கு, நடையிலே பதறல், மூக்கிலே எரிச்சல், முன்தொண்டை நடுக்கம், கண்ணிலே கொஞ்சம் கசப்பான தோற்றம். இருக்குதா இல்லியா?

அமைச்சர் : இருக்குதே இருக்குதே! என்ன பண்லாங்க!

மருத்துவர் : இலேசாத் தீந்திடும், இந்த நோய் ஓர்
வாகைக் காரகத் தாலே கண்டது.
சீரகத்தாலே தீரணும் அமைச்சரே!

[காரகம் : ஒரு நோய். அதுவே கார்+அகம் எனப் பிரித்து கருமையான உள்ளம் அதாவது தெளிவற்ற உள்ளம் எனப் பொருள்படும்.

சீரகம் : மருந்துச் சரக்கு: அதுவே சீர்+அகம் எனப் பிரித்து உயர்ந்த உள்ளம் எனப் பொருள்படும்.]

குயில் 1-7-47

# அமைச்சருக்கும் தமிழருக்கும் உள்ள தொடர்பு

நாட்டவரை ஆதரிப்பீர்
என்றுரைக்க, நம் அமைச்சர்
கேட்டவரை நோக்கியே
கேளுங்கள்—நாட்டவரை
கூட்டுக்கும் நன்று;
குழம்புக்கும் நன்றென்றார்
மாட்டுக்கா வாய்க்கும்
தமிழ்?

நாட்டவரை ஆதரீப்பீர்—நாட்டிலுள்ள மக்களை ஆதரீப்பீர் என்று சிலர் அமைச்சரிடம் சொல்ல, அதற்கு நம் அமைச்சர், அவ்வாறு கேட்டவரை நோக்கி, "கேளுங்கள் நாட்டவரை சீமை அவரை அல்லாத நாட்டு அவரைக்காய் இருக்கிறதே அது, கூட்டுக் கறியாக்கவும் நல்லதே என்றார். இப்படிப்பட்ட மாட்டுக்கு இனிமேலும் தமிழ் வருமா? என்பது இவ் வெண்பாவின் கருத்து.

குயில் 22-12-59

## நாட்டின் முதலமைச்சர் கோட்டை குப்பத்தில்

சீரார் சென்னை முதல மைச்சரே!
பாரோர் போற்றும் பண்புடை யோரே!
தென்னார்க் காட்டைச் சேர்ந்த பீர்க்கா
கோட்டைக் குப்பம் வாழும் குடிகள்யாம்
தங்கள் வருகையை எங்கள் பேறென
எண்ணி வரவேற் கின்றோம் இந்நாள்;
தங்கள் மனமுவந்து யாங்கள் வாழ்விடம்
வருகை தந்ததே மகிழ்ச்சிக் குரியது
நன்றியும் வணக்கமும் நவிலு கின்றோம்.

நாட்டுக்கு மீட்சி வந்த நாள்முதல்
இந்நாள் வரைக்கும் எங்கள் ஊர்நிலை
இன்னதென்று யாரும் நினைக்கிலர்.

பொன்விளை புழுதியைப் புனலால் நனைக்க
மின்சார வசதி வேண்டும் அன்றோ!
இன்று வரைக்கும் இம்மியும் இல்லை.

வெயிலில் கிடக்கும் குயிலாப் பாளையம்
தண்ணீர் வசதி இன்றித் தவித்தது,
பாதை வசதி ஏதும் இல்லை.

சின்ன கோட்டைக் குப்பம் சிறிதும்
பாதையின்றிப் பள்ள மாகின்றது.
எழில்சேர் நன்செய் நிலங்கள் இருந்தும்
குழாய்க் கிணறு இல்லாக் குறையால் ஏதும்
உழாத நிலைமை உடையன ஆயின.

செந்தமிழ் நாட்டுக்குத் தந்தை யாரே
இங்குயாம் இரங்கிக் கேட்டவை எல்லாம்
எங்கட்கு இன்றி யமையா தனவே.
ஆவன செய்ய வேண்டும் ஐயா;
நீவிர் நீண்ட நாள்முத லமைச்சராய்
இருக்க வேண்டும் என்பது எம் அவா.
நீடுழி வாழ வேண்டும்
நாடு செழிக்க வேண்டும் நன்றே!

குயில் 30–8–60

[31–8–1960 சென்னை முதலமைச்சர் காமராசர் அவர்கள் புதுவைக் கோட்டைக்குப்பம் வருகை தந்த போது அவரை அன்புடன் வரவேற்றுப்படித்தளித்த வரவேற்பு வாழ்த்திதழ்.]

## வாழ்த்திதழ்

செந்தமிழ் நாடு செய்த தவத்தால்
வந்த வாய்மைசேர் முதல மைச்சரே,
தாய்மை மிக்க காமராசரே,
வருக தங்கள் வருகை நன்றாக!
மட்டிலாக் காரியம் மலிந்திருக் கையிலும் எம்
முட்டரும் பட்டில் முகந்திருப் பியதை
நாங்கள் மறவோம்! செய்த நன்றியை
என்றும் நினைப்போம் வணக்கம் ஏற்க.
முதுவிழுப் புரத்து முட்ரும் பட்டு
மண்ணுள் ஓடும் தண்ணீர் எடுக்கும்
மின்சார வசதி இல்லை! விளைச்சல்
மங்கி வறுமை மிகுதியாயிற்றே!
அழகு விக்கிற வாண்டி அணையினின்று
எம்முட்டரும்பட்டின் ஏரி வரைக்கும்
ஏறத் தாழ பதினாறேரிகள்.
ஆயினும், அங்குள மெயின் வாய்க் காலே
முப்ப தாண்டுகள் முடிந்தும் இன்றுவரை
வெட்டப் பட்டதே இல்லை மெய்இது!
சூழ்ந்துள்ள நிலங்கள் வாழ்வ தெப்படி?
உரைக்கும் இப்பிர்க்கா ஓரூரினின்றே
ஓரூர் செல்ல பாதைகள் உண்டா?
இல்லவே இல்லை. இன்னல் அடைகின்றோம்
எங்கள் முதல்வராய் நீங்கள் இருக்கையில்
இக்குறை தீர்க்கப் படாவிடில் இனியாம்
திக்கிலாது திகைக்க வேண்டும்.

வாய்மை சேர் காமராசரே வாழ்க!
தூய்மை யுள்ளத் தோழரே வாழ்க!
உங்கள் பெரும்புகழ் உயர்க!
எங்கள் தந்தையே வாழ்கஎந் நாளுமே!

குயில் 30–8–60

[6–9–60ல் விழுப்புரம் தாலுக்கா முட்டரும்பட்டுக்குச் சென்னை முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் வருகை தந்த போது ஷியூர் மக்கள் சார்பில் வரவேற்று மகிழ்ந்தளித்த வரவேற்பு.]

## காமராசர்க்கு அஞ்சல்

காமராசரே! ஒரு காமாட்டி
உங்களிடத்தில் ஒவ்வொரு நாளும்
வந்து மக்கட்குச் சிபார்சு கேட்பான்;
அதற்கு அவரிடத்தில் ஐந்நூறு ஆயிரம்
வாங்கிக் கொள்வான். அது மட்டுமன்று!
பெரியார் கேட்பதாய்ப் பெரிய தொகையும்
உங்களைக் கேட்பான். ஒரு தொகை கொடுத்தால்
அவனே, அவுக் கென்று வாயிற் போட்டுக்
கொள்வான். அப்பயல் பெரிய கள்வன்!

எப்படி யாவது போகட்டும் என்றால்
பெரியார் கட்சிக்குப் பெரிய தீமை
ஏற்படு கின்றதே! எப்படி என்றால்,
அவனுக்கு நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு
செல்வாக் கினையும் தீய வழியில்
செலவிடு கின்றான்! கலகக் காரன்.

இயக்கந் தன்னில் இருக்கும் பொறுக்கிப்
பசங்களை யெல்லாம் தன்பக் கத்திற்கு
இழுத்துக் கொண்டே இருக்கின்றானே!
வேறு கட்சியை அமைக்க விரும்பினான்?
அன்றொரு குள்ளன் எப்படி? அப்படி!

அமைச்சரே அவனுக்கு நீங்கள் அளிக்கும்
ஒவ்வொரு சலுகையும் இயக்க உடம்பின்
ஒவ்வோர் உறுப்பையும் அறுப்ப தாகும்.
உலகினர் உள்ளம் எல்லாம் கலந்த

உலகில்சீர் திராவிடர் கழகம் அதனில்
கலகம் புகுத்தக் கருதா நீங்கள்
தீய நாயினைச் சேர்க்க லாகுமா?

இப்படிச் சொல்லும் என்னை நோக்கி
நீங்கள் ஒன்று கேட்க நினைக்கலாம்
"அவன் செயும் தீமையைப் பெரியார் அறிந்தும்
ஏன் வைத்திருந்தார்" என்று கேட்டால்
வரட்டும் அவன் என்று இருப்பார்,
வருவாள் அவன்தன் மனைவி எதிரிலே!

குயில் 25-10-60

## முதலையோடு பார்ப்புகளும் வந்தனர் கெட்டது பிரஞ்சிந்தியா

பிரஞ்சிந் தியாஎனும்
பெயருள குளத்தில்
இருந்த கொடிய
முதலையை எடுத்து
யூனியன் ஆற்றில்
போட்டனர்! அவ் ஆறு
தீதுறு முதலை
போதா தென்று
ஆயிரம் பார்ப்பொடு
திரும்பிப்
பாய்ந்து கெடுத்தது
பள்ளக் குளத்தையே!

குயில் 8–9-59

## மன்னை மாநாட்டுத் தீர்மானங்களின் கருத்து

தமிழ்நாடு தில்லியின் தனிஅடி நாடா?
வரியின் வாயிலாய் அறுபது கோடியை
இந்தா என்றே இங்கே கொடுக்கும்
தில்லியின் செய்கை தில்லு முல்லே!

பதினை ராண்டில் பணத்தாள் அச்சிட்டு
முப்பத் தைந்து கோடியை முடக்கிய
தில்லியின் சுரண்டல் திடுக்கிட வைத்தது.

பணம்உறை நிலையம் ஆயுட் பதிவு
வாய்புகை வண்டி, அஞ்சல் நிலையம்
வாணிக ஒற்றுமை நிலைய வாய்ப்பு
வகுக்கும் இவற்றின் வருமா னத்தில்
செந்தமிழ் நாட்டுக்குச் சேர வேண்டிய
சிலகோ டியையும் தில்லி விழுங்கிற்றே!

அயல்நா டுகளை அரித்து வாங்கும்
கடன்தொகை தனில்விழுக் காடு பார்த்துத்
தமிழ்நாட் டுக்குத் தருதல் வேண்டுமே!
அதையும் தில்லி அமுத்திக் கொண்டது!

பலதுறை களிலும் பதினை ராண்டாய்
ஏமாற் றியபணம் எண்ணூ று கோடி.

இதனால் தமிழரின் உழைப்பும் இழப்பும்
வளர்ந்ததால் இங்கு வறுமை வளர்ந்தது!
நம்தொழி லாளரும் நடுத்தர மக்களும்
வாழ்வில் இடிந்து கண்ணீர் வடித்தனர்.

பண்டை நாளில் உலகமே பார்த்து
வியக்கும் பேரர சாக விளங்கிய
தமிழ்த் திரு நாடு தில்லியின் தாளில்
அடிமை என்ற நிலையை அடைந்தது

இந்தியா ஒருநா டென்று கூறித்
தமிழரைச் சிறு பான்மைய ராக்கி
உயிரை உறிஞ்சு கின்றது தில்லி!

அடிமை விலங்கை அகற்றிடும் விடுதலைக்
கொடிநட்டு மீட்சி கொள்ள வேண்டுவது
மிகவும் தேவை யாகி விட்டது!

இத்தமிழ் நாட்டில் இந்தியாவைத் தில்லி
புகுத்தி மனத்தைப் புண்ணாக் கிற்றே!
தமிழுக் குரிய தக்க இடங்களை
இந்தியே விழுங்கி ஏப்ப மிட்டது!
வண்டி நிலையம் வரும்பல அஞ்சல்
அட்டை, பணம்அனுப் புத்தாள் அனைத்திலும்
இந்தி புகுத்தி இடர்விளைத்ததே!
அயல்இந் திக்கே ஆட்சிஏன் இங்கே?
தமிழர் நாட்டில் தமிழ்த்தாய் அடிமையா?

இந்த நிலையை இனியும் பொறோம்பொறோம்
இந்த மாநா டிவற்றை எல்லாம்
விளக்கிக் காட்ட விரும்பு கின்றது.

நம்தமிழ் நாடு நாலு கோடி
மக்களைப் பெற்று வாழுகின்றது;
மற்றவை போலிம் மாத்தமிழ் நாடும்
வல்லர சாக வாழலாம் அன்றோ!

ஐ. நா. என்ற நிறுவன மதனில்
உயர்தமிழ் நாடும் ஓர் உறுப்பை அடையும்
தகுதி அடை தற்குத் தடைதான் என்ன?
அயலாருக்குநாம் அடிமை என்பதே?
உடனடி யாக உரிமை வேண்டும்

பணநிலை உயரவும் பழம்புகழ் உயரவும்
உயிர்நிகர் தமிழ்தான் உயர்வு கொள்ளவும்

உரிமை மக்களாய் உலகில் திகழவும்
வறுமை நீங்கி வாழ்வில் உயரவும்
இனத்தின் உரிமை இன்றியமை யாதது!

தில்லியின் பிடிப்புச் சிறிது மின்றி
உரிமைத் தமிழகம் உண்டாக்கு வதிலும்
எவ்வழி யும்நமக் கில்லை என்றும்
கருது கின்றது பெரிதிம்மா நாடு.

உரிமை நாட்டை உடனே அடையவும்
உமது குறிக்கோள் நாடெலாம் அறியவும்
தமிழினம் தமிழ்நாடு தமிழர்நாம் என்ற
உணர்ச்சியை வளர்க்கவும் உடனடி யாக
நற்றமிழ் நாடில்லா நாவலந் தீவின்
படத்தை எரிப்ப தென்று பாரில்இம்
முழுமா நாடு முடிவுசெய்வ தோடு
எல்லாத் தமிழரும் இதிற்பங்கு கொள்க
எனவும் வேண்டு கின்றதிம் மாநாடு!

படஎரிப்புநாள் எந்நாள் என்பதைப்
பெரியார் குறிக்க என்று
அரியஇம் மாநா டறிவிக் கின்றதே!

குயில்

## பர்மாத் தமிழர்க்கு நன்றி

இனிதாக அகிலபர் மாத்தமிழர் சங்கம்
ஏழாவ தாண்டுவிழா அடைந்ததெனக் கேட்ட
மனமேநீ மகிழ்ச்சியால் கூத்தாடு கின்ருய்
வாயேநீ வாழ்த்தியே அன்பில்ஆழ் கின்ருய்.

தனித்திங்கே வாழ்கின்ற கண்களே, நீங்கள்
அங்குள்ள தமிழர்களை நேர்ற்கா ணுதர்க்கு
நினைக்கின்றீர் உங்கள்அவா இயல்பான தாகும்
நெடுந்தொலைவில் வாழுமவர் உடன்பிறந்தார் அன்ருே!

மதமான பேய்பிடித்தும் சாதிவெறி கொண்டும்
மாண்பற்ற கொள்கையினுர் கட்சிபல புகன்றும்
இதுதமிழர் தம்கொள்கை, இதுபகைவர் கொள்கை
என்பனவும் அறியாமல் இங்குள்ள தமிழர்

புதுச்சங்கம் நிறுவுவார் மறுநாளே கலைப்பார்
புகழ்மிக்க பர்மாவின் தமிழரும்அப் படியா?
மதம்சாதி கட்சிவெறி இல்லாமற், சங்கம்
வளர்ப்பார்கள் தம்வாழ்வை வளர்ப்பார்கள்நன்றே!

உடன்பிறந்த தமிழர்அங்கே வாழும்முறை காண
அவாவுகின்ற கண்களே ஒன்றுரைப்பேன் கேளீர்:
கடல்கடந்தார் வேற்றுமையாம் கார்கடலும் கடந்தார்
கைத்தொழில் வாணிகம் அலுவல் எத்துறைதான்
எனினும்

தடங்கலின்றிப் பொறுமையும் சச்சரவும் இன்றித்
தாம்தமிழர்! தமிழ்தம்தாய்! எனும்மனம் கோணுமல்
இடம்பெற்ருர்—என்றேன்–என் சொல்லோவி யத்தை
எதிர்காண்பீர். அவர்சங்கம் எதிர்காண்பீர் மகிழ்வீர்!

ஏழாண்டு பெற்ற எழில் அகில பர்மாவில்
வாழ்தமிழர் சங்கம் வளர்ச்சிபெற்று—வாழியவே
நேயத் தமிழர் நிலையுயர்க! செந்தமிழ்த்
தாயே வளர்க தழைத்து.

குயில் 23—6—59

# துணைவேந்தர்க்கு விண்ணப்பம்

''தமிழ்மொழி ஆயும் தமிழ்ப்புல வர்தாம்
தமிழகம் காக்கும் தகுதி வாய்ந்தவர்''
என்பது தமிழ்ச்சான் ரோரின் எண்ணம்!

அண்ணா மலைப்பல் கலைக்கழகந்தான்
பண்ணிய தவத்தின் பயனே யாகத்
தேவ நேயப் பாவாண ருரும்
வி. மு சோம சுந்தர ருரும் அமைந்தனர்.

கழக அரசு நிழலில் நேற்றுச்
சோமசுந் தரனார் தூய்மை கண்டேன்.
அன்னார் நாட்டு மக்களின் அன்பர்.
சிறிய பூனை அன்று பெரிய
வேங்கை அவர்எனல் விளக்கம் ஆனதே!

இந்நாள் தமிழர் பசிபசி என்று
தரக்கேட் கின்றனர். சோமசுந்தரனார்
சரக்கு மாளிகை திறக்கத் தக்கது.
மொழிஅறி யாமை மூடத் தக்கது.

தமிழ்மொழி ஆய்வுக் கென்றே தக்க
துறைத்தனம் அமைப்பதால் தொல்லை தொலையும்
துணைவேந் தர்தம் தூய முயற்சியால்
இணைய வேண்டும் இந்த நிறுவனம்
மனம்வைக்க வேண்டும் ஐயா!
இனம்தன் மேன்மை எய்தும் பொருட்டே.

குயில் 26–7–60

## அலுவலாளர் வேலை நிறுத்தம்

அனைத்துநாட் டலுவலர்
அலுவல் நிறுத்தம்
பணியளவு இருக்கும்
என்றனர்
தினையள வாகச்
சிறுத்தது வியப்பே!

## சென்னையும் வேலை நிறுத்தமும்

அலுவல் நிறுத்தம்
அப்படி இப்படி
என்றனர், சென்னைக்
கிளர்ச்சி எலிகளோ
காம ராசர் காணி
யாட்சியில்
நெல்லொன்று பல்லொன்லு
பட்டதும்
இல்லை.வால் அறுந்
தோடின அவைகளே.

குயில் 26–7–60

# வெள்ளாட்டில் சிவம் இல்லையா?

மீன்வளர்த் தார் ஆள வந்தார்—நல்ல
வெள்ளாட்டைக் கொல்ல முனைந்தார்
ஏன் அது? ஏன் இது? நண்பா—சொல்
இதுவும் அவர்க்குள்ள பண்பா?
ஊன்தந்து காக்கும் வெள்ளாடு—பால்
உதவி புரியும் அன்போடு
ஆன காந்தி அவர் தலைவர்—வெள்
ளாட்டுப் பாலருந்தி வாழ்ந்தார்.

சைவம் என்று பெயர் சொல்லிப்—பல
தவறு செய்துவாழ் கின்றார்;
கை வைத்திருக்கும் இடமெல்லாம்—மிகு
காமக் கிழத்தியரின் மார்பே!
பொய்யும் புலையும் அவர் வாழ்க்கை—ஒரு
பொது நலத்தில் மனம் இல்லை
ஐயகோ தம்பி ரான்கள்—வெள்
ளாட்டில் சிவத்தையா காண்பார்?

காட்டை அழிக்குமாம் ஆடு—நம்
கையள வுள்ளதா காடு?
பாட்டை ஓரமுள்ள புதர்கள்—அவர்
பார்வை தன்னிற் பெருங் காடு!
நாட்டை ஆள வந்து விட்டார்—அவர்
நல்ல செயலில் மனம் ஒட்டார்
மாட்டைக் கட்டி ஏர் உழுவோர்—வெள்
ளாட்டை எருவுக்குத் தொழுவார்.

குயில் 27–9–60

# கன்னடம் பணிய வேண்டும்

கன்னடர் தம்மூர்க் கவின் விழாவுக்கே
இன்னிசை பாட எம். எஸ். சுப்பு—
இலக்குமி தன்னை இட்டுக் கொண்டு
போயினர். கச்சேரி தொடங்கும் போது
நாயினம் நடுவில் குலைப்பது போலக்
கன்னடர் ஒருபால் கூடி "என்னமாய்த்
தமிழ்மகள் இங்குத் தலை காட்டினாள்" என்று
கூச்ச லிட்டனர் ஆச்சா போச்சா
என்றனர்-தமிழை எதிர்த்தனர். தமிழரை
இழிவு செய்து பேசினர். பழிபல
கூறினர், தம்முயர்வு கூறித் துடித்தனர்.
உலகு புகழ் வாய்ப்பாட்டுத் தலைவிமேல்
வெறுப்புக் காட்டினர் கறுப்புக் கொடியும்
காட்டினர். தங்கள் கீழ்மை காட்டினர்.

நான்குகோடி நற்றமிழ் வீரர்
உடன் பிறந்த ஒருகலைச் செல்வி
தலைகுனிந்து தமிழகம் திரும்பினாள்.

கன்னடர் அயலர் என்று நாம் என்றும்
கருதிய தில்லை. கன்னடர் தமிழகத்தில்
வாழ்வதை மறுத்த தில்லை. அவர்கள்
தாழ்வு பெறும் வகை தாக்கிய தில்லை.
மதிப்புக் கொடுக்க மறுத்ததும் இல்லை
தமிழகச் செல்வம் தக்கபடி திரட்டினர்
எதிர்த்த தில்லை. இத்தமி ழகத்தின்
கண்மணிகரி ஒருமகள்-ஒரு நாள் கன்னடம்
சென்று புகழைச் சேர்த்ததை அவர்கள்
பொறுக்க வில்லை. நாம் இதைப் பொறுப்பதா?

கன்னடர் புரிந்த இந்தக் குற்றம்
சின்னதென்று செப்புதற் கில்லை.
அவர்கள் தமிழரைப் போருக் கழைத்தனர்.
அவர்கள் தமிழைத் தாழ்வு படுத்தினர்
இந்நாள் அவர்களின் இச்செய லுக்குக்
காரணம் எதுவெனக் கருத வேண்டும்,
தமிழர்கள் தமிழகம் பிரிதல் வேண்டும்
என்று கூறு கின்றனர். எனவே
தமிழக அண்டைப் பகுதிகள் தம்பால்
நண்பு கொள்வதை நாடினர் தமிழர்;

இன்றைய ஆட்சியாளர் இதனை
வெட்ட நினைப்பதில் வியப்பே இல்லை.
கன்னடர் இன்று காட்டிய கையிருப்பு
ஆட்சி யாளரின் தூண்டலின் விளைவே.
நாமிதை விட்டு வைத்தால் நல்லதா?

கன்னடர் பணிவு காட்டும் வரைக்கும்
மூளட்டும் அறப்போர்! தமிழே
ஆளட்டும் நாவலந் தீவனைத் தையுமே!

குயில் 15-5-62

# வரிசை கெட்ட உருசிய நாடு

உருசிய நாட்டில் ஒரு தொழிலாளி
பொதுவுடை மைத்தாள் ஒன்றில் புகல்வான்:

உருசிய நுண்ணுணர் வுடையவர் இந்நாள்
எழில்நிலவு நோக்கி ஏவு கணைகள்
ஏவு கின்றதால் என்னைப் போன்ற
ஏழைகட்கு என்ன கிடைக்கக் கூடும்
என்றான். உருசியில் ஏழைகள் இல்லை
என்று கூறும் இழிந்த அறிவினர்
இதனை எண்ணி அடங்க வேண்டும்.

மேலும் அன்னவன் விளம்புகின்றான்:

வீட்டு வசதியை ஏவுகணை கூட்டுமா?
உருசிய நாட்டில் உள்ள மக்கள்
மச்சு வீட்டுக்கு வௌவால் அடிப்பதை
எச்சில் இலைகள் அறிய வேண்டும்.

அணிபெற இன்னும் அவன் சொல்கின்றான்:

பணிமனைப் பெண்களின் பாதுகாப்பிற்கும்
பறக்கும் நிலவு பண்ணிய தென்ன?
என்று நன்றாய்க் கேட்டான் எளியவன்!

உருசிய நாட்டில் உள்ள பெண் கட்குத்
திருமணம் தேவை இல்லை என்று
கூறி அவர்களைக் குச்சுக் காரிகள்
ஆக்க ஆடவர் அலையும் கொடுமையை
ஆதரிக்கும் அழுகிய தோல்கள்
ஈது கண்டு திருத்தம் எய்துக!

அந்த ஏழை மேலும் அலறினன்:

இந்த நாட்டில் இன்றி அமையாப்
பொருள்கள் எல்லாம் போதிய அளவில்
இல்லா நாளில் குருசேவ் விளம்பர
நாடகம் ஆடுவது நல்லது தானு?
கேடுசெய் யாதா என்று கேட்டான்
ரஷ்யத் தலைவர் சிஷ்யர் உணர்க!

அவனே மேலும் அறிவு றுத்துவான்:
ஏவுகணை ஒன்றை இயற்று தற்குச்
செலவிடும் பெருந்தொகை இருந்தால்
உலவும் ஏழை மக்களுக் குதவுமே.

குயில் 21-1-60

# உருசியாவிலும் இந்தியாவிலும்

தாளரிய அரிவாளாம் அந்த உருசி யாவில்
தலையரியும் அரிவாளாம் இந்த இந்தியாவில்!

(தாளரிய)

ஆளும் தொழி லாளி சுத்தி
அங்கே இரும் படிக்கும்;
நீளச் சுத்தி இங் கெல்லாம்
பிறர் பெட்டியை உடைக்கும்!

(தாளரிய)

அத்த னையும் பொது வுடைமை
அங் கெல்லாம்! இங்கே?—ஏ
ழைத் தொழிலாளிக்கு வரும்
இரண் டில் ஒன் று பங்கே!

(தாளரிய)

ஒருவன் மனைவி மற்றவனை
உவப்ப தங்கே தப்பே—பெருத்
திருக்கும் தலைவன் மனையை இங்கே
இருவர் உவத்தல் கற்பே!

(தாளரிய)

ஆனை மட்டும் அங் கெல்லாம்
அறம் செயலே கருமம்!
சீனுவுக்குக் காட்டிக் கொடுத்தல்
இந்த நாட்டின் தருமம்!

(தாளரிய)

அங்கெல்லாம் ஒருவன் தொண்டு
மற்றவனின் பொருட்டே —கேள்
இங்கெலாம் பொதுத் தொண்டோ
இரும்பு, சிமிட்டி திருட்டே!

(தாளரிய)

# பெண்கள் காமம் கழிக்கும் கலையமா?

பெண்கள் பற்றி நீபேசும்
பேச்செல்லாம் முடை வீசும்

எண்ணம் கெட்ட உருசியனே!
ஏதும் கெட்ட உருசியனே!

(பெண்கள் பற்றி)

காமம் கழிக்கும் கலையம் என்றாய்
காதற் பெண்கள்! நிலை மறந்தாய்!
தாய்மை என்னும் பண்பு கொன்றாய்!
தலை கொழுத்தே கெடுகின்றாய்!

(பெண்கள் பற்றி)

ஒருவனுக் கொருத்தி வேண்டும்;
ஒருத்திக் கொருவன் வேண்டும்;
இருவர்தாமும் ஒன்று பட்டே
இன்பத்தை அடைய வேண்டும்.

(பெண்கள் பற்றி)

ஆடவன் தனி இருத்தல்;
அது, தான் தனை வருத்தல்!
பேடை அன்னம் இணைபிரிதல்
பெற்றஉயிர் பிரிதல் அன்றோ?

(பெண்கள் பற்றி)

மணவாழ்க்கை வேண்டாம் என்றாய்
மாட்டுவாழ்க்கை வேண்டும் என்றாய்
கணந்தோறும் இருட்டறைக்குக்
கட்டுச் சோறு கட்டுகின்றாய்.

(பெண்கள் பற்றி)

குயில் 15-3-60

## பந்தாடல்

### எடுப்பு

பொங்கல் திருநாளில் பூப்புனை பந்தாடிச்
செங்கதிர் வாழ்த்திடுவோம்—நாம்
செங்கதிர் வாழ்த்திடுவோம்— (பொ)

### உடனெடுப்பு

தங்க வெயில் ஒளி தன்னில் குளிப்போம்—செந்
தமிழில் பாடிப் பாடி உள்ளம் களிப்போம்! (பொ)

### அடிகள்

அங்கங்குப் பாடல்களும் அங்கங்கு நல்லிசையும்
அள்ளூறும் சொல்லுகின்ற போது—இங்
கெங்கும் நறும்புகையும், பூவுங் கலவையும்
ஏறிக் கமழும் விண் மீது!
சங்கை அலையெறியும் தண்கடல் நாட்டிலே
தாம்தாம்தாம் என்றே நாமும் குதித்தே! (பொ)

விட்டெறிந்த பூப்பந்து சிட்டாய்ப் பறந்தது—கண்
எட்டாத உயரத்தில் சென்றே—நம்
பட்டாடை பறக்கக் கூந்தல் பறக்க முற்
பட்டுப் பிடிப்போம் அதை நன்றே!
கட்டாணி முத்துநகை மங்கையரே கைப்பந்து
கட்டுத் தளரும்வகை விட்டடிப்போம் தொடர்ந்து— (பொ)

குயில் 1-1-48

## பொன்னூசல்

பொன்னூசல் எல்லோரும் ஆடுவமே—நல்ல
பொங்கற் புதுநாளைப் பாடுவமே!
தென்னாடு வாழிய என்றாடுவமே—நல்ல
செம்பரிதி வாழியஎன் றாடுவமே!

கன்னடம் தெலுங்குமலை யாளம் துளுவம்—நல்ல
கன்னல்நிகர் செந்தமிழும் ஒன்றென்றே
மன்னிய திராவிடர்கள்—எல்லோரும்—பிறர்
வந்தசைக்க ஒண்ணாத குன்றென்றே. (பொ)

சந்தனப் பொதிகைமலை எங்கள் உடைமை—வெண்
சங்கெறியும் தென்குமரி எங்கள் உடைமை
வந்தசைக்க ஒண்ணாத மறவர் நிலம்—நல்ல
வங்கம்வரை எங்கள்நிலம் வாழிய என்றே! (பொ)

முத்தெடுக்கும் மூன்று கடல் நட்டநடுவில்—நல்ல
முல்லை மருதம் குறிஞ்சி நெய்தல் கிடத்தே
மெத்தநலம் செய்திடும் திராவிடநிலம்—நன்கு
வெல்க வெல்க வெல்க வெல்க வெல்க எனவே! (பொ)

குயில் 1-1-48

## ஆளவந்தீர் அழிகின்றீர்

அழிகின்றீர் அழிகின்றீர் அழிக்க ஒண்ணாத
திராவிடத்தை அழிக்க எண்ணி
அழிகின்றீர்! ஆளவந்தீர் அழிக்கின்றீர் ஆளுகின்ற
அறிவே இன்றி
அழிகின்றீர்! நல்லொழுக்கம் அணுவளவும் இல்லாமே
அறங்காணாமே
அழிகின்றீர்! மக்களிலே அவர் பகைவர் இவர் நமர் என்
றழிகின்றீரே!

அழிகின்றீர்! அழியாத அன்பு நெறி காணாமே
அடாத செய்தே
அழிகின்றீர்! அதிகாரத் திரைமறைவில் தன்னலத்தை
ஆக்கி ஆக்கி
அழிகின்றீர்! இப்பெரிய திராவிடத்தின் நன்மையெலாம்
அயலார்க் காக்கி
அழிகின்றீர் திராவிடத்தை ஆரியருக் காட்படுத்தி
அழிகின்றீரே!

அழிகின்றீர் ஆட்சியினை உமக்களித்த இந்நாட்டை
அவமதித்தே
அழிகின்றீர்! உணவளித்தே திராவிடத்தை ஆளாமே
அழிக்க எண்ணி
அழிகின்றீர் உடையளித்தே அனைவர்க்கும் மானத்தைக்
காத்திடாமே
அழிகின்றீர்! ஆளவந்தும் பிறரானைக் காட்பட்டே
அழிகின்றீரே!

அழிகின்றீர் தனக்கொன்றும் பிறர்க்கொன்றுமாய் நடக்கும்
அழ நினைப்பால்
அழிகின்றீர்! ஆட்சிநிலை அடைந்தபின்னர் புதுமனிதர்
ஆக மாறி
அழிகின்றீர்! நம் கட்சி அவர்கட்சி இவர் எனவே
அறம்பிழைத்தே
அழிகின்றீர்! திராவிடர் நாம் எனும் உணர்வே இல்லாமல்
அழிகின்றீரே!

அழிகின்றீர் தொழிலாளர் அடிவயிற்றுச் சுடு நெருப்பை
அவித்தலின்றி
அழிகின்றீர்! சாதிமதம் அடிமுட்டாள் வழக்கத்தை
அகற்றலின்றி
அழிகின்றீர்! செல்வநிலை அனைவர்க்கும் பொதுவென்னும்
அறிவேயின்றி
அழிகின்றீர் அழியாத வழியிருக்க அழிநிலை கொண்
டழிகின்றீரே!

குயில் 1–7–47

# இராஜாஜி கவர்னர் ஜெனரல்

இராஜாஜி யவர்கள் இப்பெரு நாவலந்
தீவுக்குக் கவர்னர் ஜெனர லானுர்.

முன்னுள் சென்னை முதலமைச் சாகி
இன்னல் சூழ்ந்தார் இந்தியைக் கிளப்பியே!
தம் எதிர்க் கட்சித் தலைவரைச் சிறையில்
தள்ளினுர். அறத்தைத் தள்ளினுர். அதனுல்
அவரின் அமைச்சுப் பட்டமும் அகன்றது.

கவர்னர் ஜெனரல் கருத வேண்டும்
எவர்க்கும் கவர்னராய் இருக்க வேண்டும்.
ஓர நடத்தை தீர வேண்டும்.

கவர்னர் ஜெனரலால் கல்கி கூட்டம்
எவற்றையும் அடைந்திட எண்ணமிட்டுக்
குதிப்பதை என்னென்று கூறுவ திங்கே?
வரப் போகின்றுர் இராஜாஜி கவர்னராய்
என்ற சொல் கேட்ட இங்குள்ள பார்ப்பனர்
"தர்ப்பைக் கைகளால் கத்தி தூக்குவோம்"
அரபியில் யூதர்போல் ஆவோம் நாங்கள்
என்று குதிப்பதை யாரும் அறிவர்
தர்ப்பைக் கையால் சுத்தி தூக்கட்டும்
கத்தியால் என்செயக் கருதுகின்றுர்
என்பதை இங்குப் பண்ண வேண்டாம்.
பார்ப்பனர் குதிப்புக்குக் காரணம் கவர்னர்
பார்ப்பனர் என்றுதான் பகர வேண்டும்
இராஜாஜி அவர்கள் இவற்றுக்கெல்லாம்
இடந்தரா திருப்பார் என்றெண்ணுகின்றேன்

சாதி மதத்தை தவிர்ப்பதே அறம்!
அவற்றைப் பெருக்குதல் அறமே அல்ல.

இத்தமிழ் நாட்டின் இராஜாஜிக்கு
நன்னிலை வாய்த்தது நமக்கெல்லாம் பெருமை
என்று சில்லோர் இயம்பினர் இங்கே.
தமிழ்நாட்டுப் பற்றுத் தமிழர்க் குண்டு
பார்ப்பனர்க் கந்தப் பற்றே இராது.
தன்கையிற் கிடைத்ததைத் தன்னண்டையிலோர்
தமிழனுக்குத் தரவே எண்ணிடான்.
இமயத் தருகில் இருப்பினும் தேடிப்
பார்ப்பனனுக்கே படைப்பான் அன்றோ?

திராவிடர் கண்கள் திறந்திருக் கட்டும்
சரேலெனப் பாய்வார் இராஜாஜி
ஒரேஉளம் கொள்க உள்ள திராவிடரே!

குயில் 15-5-48

## முற்போக்குப் பார்ப்பனர் மாநாடு
**இதுவரை வாளேந்தாச் சோதாக்கள்**

சென்னைமா வட்டம் சேர் முற்போக்குப்
பார்ப்பனர் மாநாடு பகர் மேமுதல் நாள்
இரண்டாவ தாக இரசிக ரஞ்சனி
சபாவில், கே எஸ் ராமசாமி
சாத்திரி என்பவர் தலைமையில் நடந்ததாம்
வேதபா ராயணம் விளைத்தாராம் முதல்
இந்திய யூனியன் கொடியேற்றினர் பின்!

* * *

எம். எஸ். சுப்பிர மணியன் என்பவர்
அம்மா நாட்டுக் கடிகோ லுகையில்
"தர்ப்பைகொள் கையால் வாளும் தாங்குவோம்"
என்றார்—பார்ப்பனர் இதுவரை வாளினைத்
தொட்டறி யாத சோதா மக்களா?
இனிமேல் இவர், வாள் ஏந்துவா ராயின்
காந்தியைக் கண்டு கைகள் கூப்பி
ஏந்து துப்பாக்கியை எடுத்துச் சுட்ட
மானமில்லா வஞ்சச் செயல் இனி
யேனும் செய்யா திருப்பரோ இவர்கள்?
ஆண்டவன் உயர்வு தாழ்வுண் டாக்கினன்
ஈண்டதை மாற்றுதல் இயலா தென்று
எம்எஸ் சுப்பிர மணியன் இயம்பினர்.
உயர்வு தாழ்வுகள் உண்டாக்கிய ஓர்
ஆண்டவன் அழிந்து போனன்; இன்று
எல்லாரும் நிகர் என்பதை மறுத்துச்
சொல்லுவார் முகத்தில் தூஎன உமிழும்
மக்களாட்சி வலுத்திருப் பதனுல்
எக்களித்தல் இயலாது பார்ப்பார்க்கு!

* * *

மாநாட்டுக் கன்வீனர் மணிஎனும் ஓர் ஆள்
"அவசியம் நேர்ந்தால் அரேபியாவில்
யூதர்கள் அரேபியர் மீது தொடங்கிய
வேலையைத் திராவிடர் மீது தொடங்குவோம்"
என்று கூறினராம் நன்று! நன்று!

குருதி வெறிகொண்டு திரியும் நாய்களை
அடித்துப் போடும் அலுவலைத் திராவிடர்
எடுத்துக் கொள்ளக் கூடும்
தடுத்துக் கொள்ள முடியுமா வீறர்க்கே?

குயில் 15-5-48

# செய்தித்தாள் ஆசிரியர் கூட்டம்

**சீ. பீ.க்குப் புகழ்மாலை ஏன்?**

ஏடு நடத்துகின்ற ஆசிரியர் என்று சிலர்
கூடினார்; சீ. பீயைக் கொண்டாடி ஆர்ப்பரித்தார்.
பார்ப்பனனைப் பார்ப்பனர்கள் பாராட்டிப் பேசியதை
ஆர்ப்பாட்டம் என்றே அறைவதிலே என்ன பயன்?
"ஏனிந்தச் சீ. பீயை இந்நாள் திடீரென்று
வானம் அளாவத்தம் வாயற் புகழ்கின்றார்"
என்பதை அல்லவா எண்ணுதல் வேண்டும் நாம்.
வன்மனத்து ராஜாஜி வைசிராய் அவ்விடத்தில்
இவ்விடத்தில் ஏற்றவகை ஓர்பார்ப்பான் வேண்டுமே.
வேலையின்றி வாழ விடலாமோ சீ.பீயை
மூலையிலே தூங்காமல் முன்னே இழுத்துவைத்து
மக்க ளிடம்பகட்டி வைத்தல் நலமன்றோ?
தக்கஓர் ஓமந்தூர் காமராஜ் தம்மை
ஒழித்துப்பின் சீ.பீயை ஊராள வைத்தால்
செழிப்படைய லாமன்றோ பார்ப்பார் திருக்கூட்டம்?
வைத்திய நாதன்கள் வாய்ப்பற்றுப் போனார்கள்
கைத்திறமை அத்தனையும் காட்டி அலுத்தார்கள்
அன்னாரின் சூழ்ச்சிகள் அம்பலமே! மேலுமவர்
மின்னியமேற் போர்வை கிழிந்ததினி வேகாது.
நாட்டினிச் சீ.பீயை நல்லவரி என்பார்கள்
கூட்டத்தில் சீ.பீயைக் குற்றமிலார் என்பார்கள்,
ஏடெல்லாம் சீ.பீயை ஏற்றவரே என்றுரைக்கும்
வீடெல்லாம் சீ.பீயை மேன்மை புரிவார்கள்
வல்லவர் என்று வழுத்துவார் பார்ப்பனர்கள்
எல்லாம் சீ.பீதான் அவர்க்கு.

**குயில் 15–5–48**

## தூத்துக்குடி திராவிடர் மாநாடு

மெய்ம்மை விளங்கியது தூத்துக்குடியில்—எங்கள்
மேன்மை விளங்கியது தூத்துக்குடியில்.
பொய்ம்மை கவிழ்ந்ததுண்டு தூத்துக்குடியில்—பிறர்
புரட்டு விளங்கியது தூத்துக்குடியில்.
எம்மை விரும்பவில்லை நாட்டிலுள்ளவர்—என்ற
ஏமாற்றுத் தொலைந்தது தூத்துக்குடியில்.
செம்மை அடைந்தனர் திராவிடமக்கள்—என்னும்
செய்தி புலப்பட்டது தூத்துக்குடியில்.

நூறுயி ரக்கணக்கில் தூத்துக்குடியில்—தங்கள்
நோக்கம் வெளிப்படுத்த வந்து குவிந்தார்:
ஆறுயிர மகளிர் வந்து நிறைந்தார்—தங்கள்
அன்புத் திராவிடத்தை மீட்கும் நினைவால்
நீறுகிப் போனதுண்டு பகையுளந்தான்—மிக
நீளக் கிடக்கும்நம் திராவிடத்திலே.
வேறேது திராவிடர் கழகமல்லால்—என்ற
மெய்ம்மை விளங்கியது தூத்துக்குடியில்.

இன்பத் திராவிடமும், ஆளும் பொறுப்பும்—எவையும்
எமக்கே எனும் இறுதி முரசறைந்தோம்.
வன்பு மிகு பகையை எங்கள் கழகம்—வெளியில்
வாடா என்றழைத்தது தூத்துக்குடியில்
அன்பும் உடற்சதையும் எங்களுயிரும்—எங்கள்
இருப்பும் இறப்பும் இத்தி ராவிடமடா—எனில்
உன்போல நாடோடி நாங்களில்லையே—என
வகையினுக் குரைத்தது தூத்துக்குடியில்.

ஆட்சி உடையசில திராவிடர்பால்—மெல்ல
அணுகிக் கழகத்தவர் தம்மிற் சிலரை
வாட்டி மகிழ்ந்துவரும் பகைநரியின்—வஞ்ச
வாலறுந்து போகுமென்று தூத்துக்குடியில்!
காட்டினர் திராவிடர் கழகத்தவர்—மக்கள்
கடல்ஒன்று முழங்கிற்றுத் தூத்துக்குடியில்!
நாட்டினில் ஆதரவு கழகத்துக்கே—என்று
நடுங்கிற்றுப் பகைப்புலம் தூத்துக்குடியில்.

குயில் 15-6-48

## கோட்சே கூட்டத்தின் கூற்றுக்கு மாற்று

ஜூன்மாதம் பதின்மூன்றில் இளைஞர் சங்கத்
தொடக்கத்தில் சுப்பாராவ் தலைமைப் பேச்சில்
"நான் சொல்வேன் சாதிஎனும் பாகு பாடு
தவிர்த்தெவர்க்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்று
மேன்மையுறு நேருரைத்தான்" என்று நன்றாய்
விளம்பிடுவார் ஏனென்றால் நேரு பார்ப்பார்!
ஊன் நலங்கா துழைக்காமல் தம்மி னத்தார்
உயர்நிலையை எய்திவிட்ட தறியார் அன்னார்.

ஏமாற்றப் பட்டுள்ள ஏழை மக்கள்
இனியேனும் தலைதூக்க விட்டு விட்டால்
தீமையன்றோ தம்கோட்சே கூட்டத் திற்கே?
நேரு சொல்வார் செவ்வையாய்ச் சொல்லுவாரே!
தூய்மையுறு திராவிடர்கள் விழித்துக் கொண்டார்
பார்ப்பனர்கள் சொன்னபடி இந்தச் சர்க்கார்
தாமடங்க வேண்டுமோ! ஆண்மை யுண்டேல்
அசைக்கட்டும் திராவிடரை இச்சர்க் காரே!

சுப்பாராவ் மேலும் அம் மாநாட்டின் கண்
சொல்லு கின்றான் "வேற்றுமைகளை மறந்தே
இப்பெரிய சமூகத்தை நாம் ஒன் றாக்க
முயற்சித்து வருகின்றோம்" என்பதாக!
சுப்பாராவ் என்னும்கோட்சே கூட்டத்தார்
சொல்வது போல் முயலுவது மெய்ம்மை தானா?
எப்போதா கிலும் நினைத்த தேனு முண்டா?
எரிநெஞ்சைக் குளிர் மொழியால் மறைக்கின்றாரா?

சாதிகளை மறந்துவிட வேண்டாம் என்று
சென்னைவாழ் சர்க்காரே சொல்வதாக
ஓதுகின்றார் சுப்பாராவ். அது வெறும் பொய்
சாதியினை ஒழிப்பாரோ காந்தி என்று
தாது கலங்கிய கோட்சே கூட்டம் அந்தத்
தக்கானைக் கொன்றதுதான் மெய்ம்மையாகும்.
சாதியினால் வாழ்வதெனும் கொள்கை இந்தச்
சர்க்காருக் கில்லை! சுப்பா ராவுக்குண்டு.

குயில் 15-7-43

# கல்வி அமைச்சர்க்கு

**கட்டாயப் படிப்புக்குப் பணத்தைச் செலவு செய்தாயிற்று, ஆனால் வாயால் இந்தி கட்டாயமில்லை என்பதா?**

இந்தியினைக் கட்டாயம் இல்லை என்றீர்
இருக்கின்ற பார்ப்பனர்கள் உமை எதிர்த்தார்.
இந்திமொழி கட்டாயம் என்றீர், பின்னர்
இப்போதோ கட்டாயம் இல்லை என்று
தந்திரத்தைக் காட்டுகின்றீர்! இந்திக் கன்றோ
தமிழர்களின் பெரும்பொருளைச் செலவு செய்தீர்!
பொந்திலுறும் வடமொழிக்கே அன்றோ நீவிர்
பொருளையெலாம் செலவிட்டீர்! என்ன நோக்கம்?

கட்டாயப் படிப்புக்குத் தேவை யான
கணிசமுள தொகையினையும் தொலைத்தீர்; இந்தி
கட்டாய மில்லையென வாயாற் சொன்னீர்.
கனிதமிழை எல்லார்க்கும் தமிழகத்தில்
கட்டாயம் கற்கஐந் தாண்டின் திட்டம்
கடிதினிலே அமைத்திட்டால் தொல்லை யுண்டா?
விட்டுவைப்போம் இந்தியினைத், தேவையுள்ளோர்
வீட்டினிலே படியாரோ அதுவரைக்கும்?

என்னமுழு கிப்போகும் இந்தி தன்னை
எடுத்துவிட்டால்? ஒப்பாத இந்தி தன்னை
வன்மையுடன் எதிர்ப்போர்கள் சிலரே என்றீர்.
மறந்தீரா? கண்ணிலையா? வாய்க் கொழுப்பா?
சின்னமதி யா? உள்ள அதிகா ரத்தின்
திமிர்தானா? அவினாசி லிங்கத் தாரே
இன்றைக்கோ உம்வீட்டுப் பண்ணையாளும்
இந்திஎதிர்ப் பார்கட்சி என்றுணர்வீர்.

குயில் 15–8–48

# கெட்ட மாணவரிடம் ஒற்றுமையா?

ஆரிய ஆசான் "பேரைச் சொல்லி"
அழைக்க, அதற்குத் தமிழ்மா ணாக்கன்
உள்ளோன் ஐயா என்றே உரைத்தான்
அப்படிச் சொல்லல் தப்படா என்ற
இழிஞனை எதிர்த்த துண்டா மாணவன்?

தாயாம் தமிழில் கையெழுத் திடும்படி
சேயாம் மாணவன் தெரிவித்த போது
வடமொழி யிற்றான் கையெழுத்து வைப்பேன்
என்று பலபடி இழித்துப் பேசிய
மாபாவி தன்னை அந்த மாணவன்
எதிர்த்த துண்டா? இல்லவே இல்லை.

எதுதான் வடசொல்? எதுதான் தமிழ்ச்சொல்?
என்று வினவிய எளியமா ணவனை
எதிர்த்த இழிஞனை அந்த மாணவன்
எதிர்த்த துண்டோ? இல்லவே யில்லை.

வடமொழி உயர்ந்தது தாய்மொழி தாழ்ந்ததே
என்ற பள்ளி ஆசிரியன் தனை
எந்த மாணவன் எதிர்த்தான் இதுவரை?

வடசொலி னின்றே தமிழ்ச்சொல் வந்ததாம்
என்ற மடையனை எந்த மாணவன்
எதிர்த்தான் இதுவரை? இல்லவே இல்லை.

தம்மினத்தைத் தம்தாய் மொழியைத்
தாக்கிடுவோ னுக்கும் அவனைத் தாங்கிய
தலைமை ஆசான் தனக்கும் அஞ்சும்
மாணவர் எல்லாம் மான மிழந்தவர்.

ஆனால் அந்த மாணவர் இந்நாள்
ஒற்றுமை பெறுவதை ஊக்க வேண்டும்!

பச்சை யப்பன் பள்ளி மாணவர்
ஒன்றுபட்டுக் கேட்ட வசதியை
இன்றே செய்து தருவது சிறந்ததே.

குயில் 27–12–60

# கிழிந்த விண்ணப்பம்

அவன்கட்சி தோற்பதற்கும் என்கட்சி வெல்வதற்கும்
அரசே! நீவிர்
தவணையின்றித் தமிழர்க்கு நன்மைஎலாம் செய்க என்று
தமிழன் கேட்டான்
எவன்கட்சி தோற்றாலும் எவன் கட்சி வென்றாலும்
கவலை இல்லை!
நவில் 'பார்ப்பார்' நம்மைகெடக் கூடாதென்றே அரசன்
நாட்ட லானான்.

அவன்வென்றால் தமிழர்க்கும் அரசர்க்கும் தீமையே
ஆகும்! முன்னர்
அவன் ஆண்டான் தமிழரெலாம் அல்லலுற்றார் ஆதலினால்
வெறுத்தொ ழித்தார்.
அவன்வென்றால் தமிழ்சாகும் தமிழரெங்கே? எனத் தமிழன்
அழுதல் கேட்டே
'அவன்' என்றால் யார்என்று மன்னர்கேட் கத்தமிழன்
அறிவிக் கின்றான்:

ஆச்சாரி தான்கெட்ட ஆச்சாரி தான் தமிழர்
அழிவை நாடும்
ஆச்சாரி தான்எனவே ஆச்சாரி மேற்பழியை
அடுக்க லானான்.
ஆச்சாரி ஆச்சாரியே அவர் மேல் அடைமொழிக்குப்
பொருளே இல்லை.
ஆச்சாரி வெற்றிஎன் வெற்றிஎன் றால்பூனூல்
ஆசர் தாமே.

குயில் 3-1-61

## எல்லாம் தமிழர் உடைமையே

கூருநட இசையும் தமிழர் கண்டதே!
பல்லிசை கட்கும் வடக்குப் பாவிகள்
இழிந்ததம் வடசொற் பெயரை இட்டனர்.

ஏழிசை வடவர் கண்டிலர்; அன்றியும்
யாழிசை அறியார்; குழலிசை அறியார்;
இனிமை தோன்றப் பாடுதல் அறியார்;
ஆதியே தமிழர் அறிந்தவர் இவைகள்,
ஆரிய மறையில் அமைந்த தொன்று
சாமம் பெயரால் சாற்றும் முறையைக்
கேட்டறியாத நாட்டு மக்கள்
கோயிலின் தேர்விழாக் கூட்ட நடுவில்
தவளைகத் துவதையும், நாய்குறைப் பதையும்
கேட்டுக் காது கிழிபட் டிருப்பார்;
அதுதான் அவர்இசை; சாம வேதம்!

* * *

ஓவியம் தமிழர் உளத்தின் வளர்ச்சியே!
ஆரியர் ஓவியம் அறியார்! மற்றும்
தச்சும் முதன்முதல் தமிழன் கண்டதே!
படமயில் ஆடும்; பார்த்த ஓவியன்
நடஅர சென்று வரைந்து நல்குவான்;
நல்கிய அதற்குப் புல்லுடைப் பார்ப்பான்
அதுதான் கடவுள் அதற்குயிர் தருவேன்
என்பான்; தமிழனும் ஆம்ஆம் என்பான்.

* * *

மருந்து தருவோர் மருத்துவம் என்பதும்
இருந்து பார்ப்பான் இங்குக் கற்றதே.

* * *

இன்னும் ஒன்றையும் இயம்புவேன் கேட்க.
வேட்டி யைக்கீழ்ப் பாய்ச்சிக் கட்டுகை
அதுவும் பார்ப்பானுக் கமைந்த வழக்கம்.
வேண்டாம் என்று விளம்புவான் ஒரு பயல்.
வேட்டி, சட்டை, காசு, மெய்ப்பை
இவைஎலாம் தமிழ்ப்பெயர்! பண்டே கண்டவை!
காற்சட் டைஎன மேற்சட் டைஎன
இப்போ திருப்பவை, அப்போ திருந்தவை.

* * *

தமிழன் உடைமையை வடவன் உடைமைஎன்று
தமிழனே ஆக்கித் தலைகவிழ் கின்றான்.

* * *

இந்நாள் தமிழில் இருக்கும் எண்களை
அந்நாள் அரபியர், ஆங்கில மக்கள்
எடுத்தாண் டார்கள்! இதை ஆ ராய்க!
தமிழில் ஒன் று மில்லை என்றும்,
தமிழில் இலக்கியம் இல்லை என்றும்,
தமிழைத் தொலைக்க வேண்டும் என்றும்,
கூறும் குறுகிய கொள்கை உடையோர்
எல்லாம் வடவர் சொத்தே என்று
சொல்லுவது நாளைய பிணஞ்சொல் லுவதே.

குயில் 3-1-63

# இனம் ஒழிப்பு

ஜமீன் ஒழிப்பு நல்லதுவாம்
இனம் ஒழிப்புத் தீயதுவாம்
சட்ட மன்றில்

அமர்க்களமாம் இதுபற்றி!
வியப்பன்றோ? இனம்ஒழிப்பை
ஆதரிப்போர்

தமக்குரிய கடமையினைப்
புரிபவர்கள் தம்நாட்டின்
நன்மை காப்போர்!

அமிழ்த்திடுவோம் இனம்ஒழிப்பை
என்பவர்யார்? எத்தனைபேர்?
அதனைக் கேட்பீர்!

இனம் ஒழிப்பை மறுப்பவர்கள்
சிறுபான்மைக் கூட்டத்தின்
இனத்தோர் ஆவார்!

இனம்ஒழிப்பை மறுப்பவர்கள்
இனம்செத்தால் இனும்வாழ
எண்ணுவோர்கள்!

இனம்ஒழிப்பை மறுப்பவர்கள்
இனம்சொத்தால் வாழ்வோர்பால்
இனம்கொள்வோர்கள்!

இனம்ஒழிப்பை மறுப்பவர்கள்
அன்றும்இனம் என்றும்இனம்
எனவாழ்வோரே!

குயில் 1–12-47

# திராவிடர் வெற்றி

காந்தியைக் கொன்றவன்
கருத்தின் வழியே
சாய்ந்திடு கின்றனர்
தலைவர் யாவரும்

என்று நடுங்க
வில்லை திராவிடர்;
வன்மனம் கொண்ட
வைத்திய நாதரின்

குதிப்பால் எம்திறல்
குறையா துள்ளச்
கொதிப்பால் இயக்கம்
கொழுக்கும் அன்றோ?

செய்மையில் இல்லை
திராவிடர் வெற்றி
அண்மையில் என்று
முரசே!

திண்மையில் முழங்குக
திசையதிர்ந்திடவே!

குயில் 1–4–48

# பொதுவுடைமைக்கு நான் பகைவன்?

பொதுவுடைமைக்குப் பகைவனு? நான்
பொதுவுடைமைக்காரர் எனக்குப் பகைவரா?
இல்லவே இல்லை; இரண்டும் சரியில்லை.

பாரதி பாட்டில் பற்றிய பொதுவுடைமைத்தீ
என்றன் பாட்டு நெய்யால் வளர்ந்து
கொழுந்துவிட் டெரிந்து தொழிலாளரிடத்தும்
உழைப்பாள ரிடத்தும் உணர்வில் உணர்ச்சியில்
மலர்ந்து படர்ந்ததை மறுப்பவர் யாரே?

சிங்கார வேலர்முதல் சீவா வரையில்
அங்காந் திடுவர்என் பாட்டி னுக்கே.

சுப்பையாவின் தொடர்பும் தோழமையும்
எஸ். ஆர். சுப்பிர மணியம் இணைப்பும் பிணைப்பும்
எப்பொழுதும் எனை லெனினுல் ஸ்டாலினுல்
புதுமை கொணர்ந்த பொதுமை நாட்டை
மதுத்தமிழாலே மடுக்கும்என் பாட்டு.

இதுஅறி வெனத் தெரிந்த நாள்முதல் புதுவையில்
'சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவம்'
மூன்றும் என்னுயிர் உணர்வில் ஊறியவை.
என் பாட்டாலே வளர்ந்த இயக்கம்
தன் பாட்டுக்குத் தப்புத் தாளம்
பின்பாட்டுப் பாடும் பிழைப்புக் கெல்லாம்
என்னை விற்காததால் ஏதும் அறியாத
கொன்னைப் பயல்களைக் கொண்டேசு கின்றனர்.

இவர்கள் யாரெனஎனக்குத் தெரியும்.
புரட்சியின் பேரால் புரட்டுசெய் பவர்கள்,
தொழிற்சங்கத்தால் தோழர்கள் உழைப்பை

வழிப்பறி செய்யும் வலஇடசாரிகள்.
தாய்மொழிப் பற்றும் தன்இனப் பற்றும்
தாய்நாட்டுப் பற்றும் சற்றும் இலாதவர்.
முடிந்த வரைக்கும் முந்நூல் கொள்கையில்
அடித்தொழு திருக்கும் அடிமைகள்; மார்ச்சு லெனின்
நூல்களை எல்லாம் நுனிப்புல் மேய்ந்து
கால்படித் தமிழால் மேற்படியாரின்
விளக்கெண்ணெய் மொழியால் விளங்காது செய்பவர்.

உருசியன் ஒதுக்கும் ஒருகோடிப் பணத்தையும்
வரிசையாய்ப் பகுத்து வாழ்வு நடத்திடும்
பொறிக்கி களாகப் போனதினாலே
குறிக்கோள் உயர்ந்த பொதுமைக் கொள்கை
வெறிச்சென்று போனது; வெற்றியில் தாழ்ந்தது,
பாட்டாளிகளின் கூட்டம் குறைந்தது,
மூட்டிய போர்க்குணம் முடம்கொண் டழிந்தது.
கண்டிதனைக் கழறுவதாலே அறிவிலா
முண்டங்கள்எனை முழுக்க முழுக்கப்
பொதுவுடைமைக் கெதிரி என்று முழக்குவர்.

உண்மையைப் பற்றி ஒருவன் உரத்துப்
பேசும் போதும் எழுதும் போதும்
பொறுப்புணர்ச்சி வெறுப்புணர்ச்சியைக்
காட்டுவதுதானே கடமை; இல்லையேல்
நாட்டில் விளைவது நலிவும் கேடுமே!
நக்கிப் பொறிக்கிகள் நன்றி மறப்பதில்
அக்கறை கொள்ளாது அன்புடை உலகே!

புரட்சி 1-1-'63

## சம்பத்து முயற்சி

தெம்பிலாத் தில்லு முல்லுக் கழகம்
சம்பத்தால் இனித் தலை தூக்கிடுமா?

இந்தியை வடவர் செந்தமிழ் நாட்டில்
குந்தி இருக்கக் கொடுஞ்செயல் தொடங்கினர்

மொழிவழி மாநிலம் ஆக்கி, .மொழிவளர்
மாநிலம் அனைத்தையும் மகிழ வைப்பதால்
நாவலந் தீவுக்கு நன்மை யாகும்.
ஏவலராக்கி மாநிலத் தாரைச்
சுரண்ட நினைப்பவன் தூய்மை சுற்ற தன்
னின மொழி பரப்ப எண்ணி அழிவான்!

செந்தமிழ்ப் பற்றும் செந்தமிழ் மக்களும்
பிரிக்க முடியா ஒன்று! பிரிப்பவன்
இருக்க முடியாக் கல்லறை இருப்பே.

இந்தி இங்கு வருவதைத் தடுப்பது
செந்தமிழ் மக்களின் சிறந்த கடமை!
சம்பத் திதனை உணர்ந்தது சரியே
ஆயினும் அதனை அன்பிலாரி டத்தில்
இயம்பி அவரிடம் இந்தி எதிர்ப்பை
எதிர்பார்த் திடுவது சரியா? அன்று!

காசறை கட்டு கின்றவர்
பாசறை காண்பர் என்பது பசப்பே!

குயில் 21–6–'60

## "கற்பனை உலகில்"

தெருபக்கக் கூண்டறையில் இருந்தேன் மேஜை
சிறியதொரு நாற்காலி, தவிர மற்றும்
இருந்த இடம் நிறையமிகு பழந்தாள், பெட்டி
எண்ணற்ற சிறுசாமான் கூட்டம்! காற்று
வருவதற்கு ஜன்னல் உண்டு சிறியதாக
மாலை, மணி ஐந்திருக்கும் தனியாய்க் குந்தி
ஒருதடவை வெளியினிலே பார்த்தேன் அங்கே
ஒரு பழைய நினைப்புவந்து சேர்ந்தது என்பால்!

நெஞ்சத்தில் அவள்வந்தாள்; கடைக்கண் ணால்என்
நிலைமைதனை மாற்றிவிட்டாள்; சிரித்தாள் பின்னர்
கஞ்சமலர் முகத்தினையே திரும்பிக், கோபம்
காட்டினாள்! பூமலர்ந்த கூந்தல் தன்னில்
மிஞ்சும் எழில் காட்டினாள்! அவள்தன் கோபம்
மிக லாபம் விளைத்ததன்றோ என்ற னுக்கே!
'அஞ்சுகமே வா' என்று கெஞ்சி னேன்நான்
அசைந்தாடிக் கைப்புறத்தில் வந்து சாய்ந்தாள்.

இவ்வுலகம் ஏகாந்தத் தின்வி ரோதி;
இதோபார் ஏ! பிச்சை என்று ஒருத்தி வந்தாள்.
திவ்வியமாம் ஒருசேதி என்று சொல்லித்
தெருநண்பர் வருவார்கள் உயிரை வாங்க!
'வவ்வவ்'வென் றொருகிழவி வருவாள், உன்றன்
மண நாளில் என்னைஅழை என்று சொல்வாள்!
ஒவ்வொன்று?—என் செயலாம்! நீயும் நானும்
உயர்வானில் ஏறிடுவோம் 'பறப்பாய்' என்றேன்.

மல்லிகையின் அரும்புபோல் அலகும், நல்ல
மாணிக்கக் காலும், மணிவிழியும் பால்போல்
துல்லியவெண் சிறகும்உற்ற வெண்பு றுவாய்த்
துலங்கினாள் நானும் ஆண் புறுவாய்ப் போனேன்

அல்லலற்ற வானவெளியில் இருவர் நாங்கள்,
அநாயாச முத்தங்கள்; கணக்கே இல்லை;
இல்லையென்று சொல்லாமல் இதழ்கள் மாற்றி
இறுத்தெடுத்த அமுதமுண்போம்; இன்னும் போவோம்.

பொன்னனைத்துக் கதிர்பாயும் முகிலிற் பட்டுப்
புறஞ்சிதறும் கோடிவண்ண மணிக்குலம்போல்
மின்னும் மணிக்குவியலெல்லாம் மேகம் மாய்த்து
விரிக்கும் இருள்! இருள்வானம் ஒளிவான் ஆங்கே
சென்னியை என் சென்னியுடன் சேர்த்தாள் ஆங்கே
சிறகினோடு சிறகுதனைப் பின்னிக் கொண்டே
என்னைஅறி யேன்! தன்னை அறியாள்! பின்னர்
இமைதிறந்தோம் ஆகாய வாணி வீட்டில்!

பாரத நாட்டாரடி நாம்வா என்றேன்,
பழஞ்சாமான் சிறுமேஜைக் கூண்டறைக்குள்
ஓரண்டை நாற்காலி தன்னில் முன்போல்
உட்கார்ந்த படியிருந்தேன் பின்னும் உள்ளம்
நேர்ஓடிப் பறக்காமல் பெண்டு, பிள்ளை
நெடியபல தொந்தரைகள், நியதி இன்றிப்
பாராளும் தலைவர்களின் செய்கை எல்லாம்
பதட்டமுடன் என்மனத்திற் பாய்ந்த தன்றே.

தமிழரசு **15-12-1938**

## நிமிர்ந்து நட!

கொஞ்ச வயதுடையான்—அவன்
கூனற் கிழவனைப் போல்

அஞ்சி நடந்து சென்றான்—ஐயர்
ஆரடா தம்பி என்றார்!

அஞ்சலி செய்து நின்றான்—ஐயர்
அவனிடம் உரைப்பார்:

"நெஞ்சு நிமிர்ந்து நட!—உன்
நேரில் அச் சேவலைப் பார்!"

சொன்ன சொல் பையனுளம்—தனில்
சுடர் கொளுத்திடவே.

முன்னைய கூனல் நடை—தனை
முற்றும் அகன்றவனாய்ச்

சென்னிதனை நிமிர்த்திக்—கொஞ்சம்
சிரிப்பையும் காட்டிச்

சன்னத்த வீரனைப்போல்—அந்தச்
சாலை வழி நடந்தான்.

ஹிந்துஸ்தான் 10-9-1939

## தேசபக்தர்கள் நாடகம்

நற்சரிதை நற்கவிதை, நல்நடிப்பு
நாடகத்தில் பாரதியார் அமைக்க எண்ணி
முற்காலம் காளிதாசன் புகன்ற
சாகுந்தலம் நடத்த முடிவு செய்தார்.

உற்ற நண்பர் ஸ்ரீநி வாசாச்சாரிக்கும்
சகுந்தலையின் வேடந்தான் உரிய தென்றார்.

பற்றறுவிஸ் வாமித்ரர் வா. வே. சுக்காம்
பகரறிய துஷ்யந்தன் நான்தான் என்றார்.

தொண்டு செயப் பலநண்பர் காத்திருந்தோம்.
துடைநடுங்கும் தமிழ்நாடு. தேசபக்தர்
அண்டுமந்தக் காரியத்தில் அண்டவில்லை.

அருங்கவியின் நாடகத்தை இழந்தார் மக்கள்
வண்டிவண்டி யாய்க்குப்பை கூளமெல்லாம்
வாரிப்போய்ப் பாரதியார் யோட்டிருந்தார்.
கொண்டுவந்து சேர்த்திருப்பார் நாடகத்தில்
குளிர்நிலவை ஒளிநிலவை அற்புதத்தை.

ஹிந்துஸ்தான் 10–9–1939

## வேங்கைக் குகையில்

எடுப்பு

நீள் வையம் எதிர்த்திடினும்—அஞ்சுதல் இல்லாத்
தோள்வாய்ந்த மூவேந்தர்—சீர் ஆட்சி

தொடுப்பு

நாள் என்ற கடல் வெள்ளம் தான் கொண்டுபோனதே
தோள் வாய்ந்த பெருந்தீயர் வரவால் இருளானதே

முடிப்பு

யாவரும் ஒன்றே எனவாழ்ந்தோமே நாங்கள்
இனம் சாதி மதவெறி அலங்கோலம்
மேவி வீழ்ச்சி நிலை அடையவும் ஆனதே
வேங்கைக் குகைக்குள் நரிவாழ்ந் திடவும் ஆனதே.

திராவிட நாடு 31-11-1944

# எது இசை

தமிழ் பாடல் முறையா நாட்டிலே கண்

வாயை மூட்டல் முறையா?
எது முறை சொல்க மனமே!

தமிழ்பேசுவாரிக்குத் தீந்தமிழினிதோ?
தாங்களறியாத பிறமொழி பாடுதல் இனிதோ?

மொழிபொருள் மிகநன்குய்க் காட்டுதல் கவியா—தம்
விழியல் உதடு காணக் காட்டல் கவியா?

பிழைபட நிந்தனை பட நடப்பது நலமா?
பெருமை ஓங்குமாறு தமிழைப் போற்றுதல் நலமா?

திராவிட நாடு 17-12-1944

## வாய்மை முரசு!

மனிதன் உண்போன்; மற்றவும் உண்பன!
மற்றவை உறங்கும்! மனிதனும் உறங்குவான்!
இன்புறும் பிறஉயிர்! இவனும் ஆங்ஙனே!
துன்புறுவான் இவன்! துன்புறும் பிறவும்!
மனிதன் அறிபவன்! மற்றவும் அறிவன
மனிதனுக்கு, மற்ற உயிர்கட்குக்
குறிகள் உண்டு! நெறிகள் உண்டு.

மனிதன் ஏன் நிலத்தில் வாய்த்த உயிர்களில்
"இனியோன்" "சிறந்தோன்" எனப்படு கின்றான்?
மூளைத்த விலங்கு முதற், சுள் ளான்வரை—
உள்ள உயிர்கட் இல்லாத தென்ன?
மனித னிடத்தில் வாய்த்த சிறப்பெது?

கேளீர், அதனைக் கேளீர், கேளீரே:
"உள்ளம் கண்டதை உள்ளவர்க் குரைத்தல்"
என்பது, மனித னிடத்தில் தானுண்டு!
பிற உயிர்களிடம் பிரசாரம் செய்யும்
தனி ஒரு மேன்மை சற்றும் இல்லை:
இம்மிகூட இல்லை என்றறிக!

உள்ளங் கண்டதை உலகுக் குரைத்தல்
மற்றவற் றினின்று மனிதனைப் பிரிப்பது;
மனித னுக்கு மாண்பு தருவது!
அஞ்சியோ பிறர்பால் ஆவது கருதியோ
வயிறு தன்னை வளர்க்க எண்ணியோ,
பெற்றதன் கொள்கையைப் பிறர்க்கென மாற்றுவோன்
உற்ற துரைக்கும் ஒழுக்கம் தீர்ந்தவன்
தாழ்ந்த சுள்ளானில் தாழ்ந்தவ னுவான்.

மனித ருள்ளும் மனிதத் தன்மை
"கொள்கை" என்று கூறுவர் அறிஞர்.
கொள்கையை விலைக்குக் கொடுக்கும் மனிதன்
மனித ருள்வாய்த்த மனித விலங்கு!
நெஞ்சை ஒளித்துப் பேசுதல்
வஞ்ச மன்றோ மாநிலத் தீரே!

முல்லை மே—1956

# தமிழர் அறிக்கை

கட்டாயத் தமிழ்க்கல்விக்
 கழகம் யாண்டும்
கவினுறவே தமிழ்நாட்டில்
 நிறுவ வேண்டும்
தட்டாமே அரசியலின்
 துறைகள் யாவும்
தமிழ்ப்பேச்சால் தமிழ்எழுத்தால்
 நடத்தல் வேண்டும்.

பட்டோம் இந்நாள் வரைக்கும்!
 தமிழர் ஒன்று
பட்டவுள்ளம் விடுத்திட்ட
 அறிக்கை இஃது
கொட்டினோம் தமிழ்முரசு!
 நாட்டை ஆள்வோர்
குறை முடிக்க! இல்லையெனில்
 புரட்சி தோன்றும்.

தமிழ்நாட்டில் துறைதோறும்
 தமிழருக்கே
தலைமைஇருந் திடவேண்டும்
 தமிழ் நாட்டில்
தமிழர்களாற் குழுஅமைத்துச்
 சட்டதிட்டம்
தமக்கான முறையினிலே
 அமைக்கச் சொல்லி

அமைத்தபடி நிறைவேற்றி
வைத்தல் வேண்டும்!
ஆள்வோர்க்குத் தமிழர்விடும்
அறிக்கை இஃது!
தமிழ்முரசு கொட்டினேம்
இணங்கா விட்டால்
சடசடெனச் சரிந்துபடும்
ஆட்சிக் கோட்டை!

திராவிடரின் பகைவர்க்கே
அடிமை யானோர்,
திராவிடர்க்கு நலம்புரிதல்
குதிரைக் கொம்பே!
அரிய தமிழ் நாட்டுரிமை
வேண்டும்; அன்றே
அன்புள்ள தெலுங்கர்க்கும்
கேரளர்க்கும்

உரிமையினை நாட்டுவதும்
தமிழர் வேலை!
ஒன்று பட்டோம், சாதியில்லை;
சமய மில்லை;
குரல்கேட்க ஆள்வோரின்
காதே! ஒப்பம்
கூறுக வாயே இன்றேல்
புரட்சி தோன்றும்.

தமிழ்முரசு 1946

# தமிழர் திருநாள்!

தைம்மதி பிறக்கும் நாள்; தமிழர் தங்கள்
செம்மை வாழ்வின் சிறப்புநாள்; வீடெலாம்
பாலும் வெல்லப் பாகும் பருப்பு நெய்
ஏலமும் புதுநெருப் பேறி, அரிசியைப்
பண்ணிலே பொங்கப் பண்ணித் தமிழர்
எண்ணிலே மகிழ்ச்சி ஏற்றும் இன்பநாள்!

புதிய பரிதியைப் புகழ்ந்து வாழ்த்தி
இதுதான் வல்லான் எழுதிய தமிழோ
எனும்படி இறக்கிய இளஞ்சூட் டின்சுவைப்
பொங்கல் இலைதொறும் போட்டுத் தேன்கனி
செங்கரும்பின் சாறும் சேர்த்தே
அள்ளூர அள்ளி அள்ளிப் பிள்ளைகள்
தெள்ளு தமிழ்ப் பேச்சுக் கிள்ளைப் பெண்டிர்
தலைவரோ டுண்ணும் தமிழர் திருநாள்!

தலைமுறை தலைமுறை தவழ்ந்து வரும் நாள்!
இருளும் பனியும் ஏகின; பரிதி
அருளினால் எங்கணும் அழகு காண்கிறோம்!
கலக்கம் தீர்ந்தது! கருத்திடை அனைத்தும்
விளக்கம் ஆயின! மேன்மைத் தமிழைப்
போற்றுதல் வேண்டும்; வண்மைத் தமிழர்
திராவிடர் என்று செப்பும் இனத்தின்
பெரும்பகை ஆரியர், வரம்பு மீறுது
மறச்செயல் தொடங்க மறத்தல் வேண்டா.

ஆடலில் பாடலில் வீடுகள் சிறந்தன!
ஊடலிற் கூடலில் உவந்தனர் மடவார்!
தெருவெலாம் இளைஞர் திறங் காட்டுகின்றனர்
சிரித்து விளையாடிச் செம்பட்டு டைகள்

பிரித்து...சிறுவர் பெருமகிழ் வுற்றனர்
எங்கணும் தங்கம் இறைத்தொளி தன்னைப்
பொங்குவிக்கும் புதிய கதிரும்
அறஞ்செயக் சாதல் அணுகுங் காலும்
புறங்காணுத புலமைத் தமிழரும்,
தமிழும் பொங்கல் நாள்எனும்
தமிழர் திருநாள் தானும் வாழியவே!

திராவிட நாடு 13-1-1947

## தமிழர் நாடு

என்னருமைத் தமிழ்நாட்டை எழிற்றமிழால்
நுகரேனே செவியில் யாண்டும்

கன்னல்நிகர் தமிழிசையே கேளேனே! கண்ணெதிரில்
காண்பவெல்லாம் நான்

தன்னேரில்லாத தமிழ்தனி மொழியாய்க்
காணேனே? இவ்வையத்தில்

முன்னேறும் மொழிகளிலே தமிழ்மொழியும்
ஒன்றெனவே மொழியேனே!

தமிழர் நாடு 3-7-

## அழியாதன்றே!

.................வெற்றிகொள்
    வலியரால் வாடும்
எளியாரின் சார்பில்
    புலியாகிப் போர்தொடுக்கும்
போதில்—வலியோர்கள்
    எய்யும்கோற் புண்ணும்
இனிதாகும் அவ்வெளியார்
    உய்ய உழைத்ததனைத்
தானினைத்தால்—வையகத்தே
    தன்னலத்தை நீத்தும்
பிறர்நலமேதான் நினைத்தும்
    என்றும் உழைப்பார்க்
கிடரிழைப்பேன்—அன்றே
    நடப்பார் அடியில்
நசுங்கும் புழுப்போல்
    துடிப்பானே தொல்லுலகி
னோரால்!—இடமகன்ற
    வையத்து நன்மைக்கே
வாழ்கவென்றுணர்ந்தவனே
    செய்யும் தொழிலில்
திறம் காண்பான்—ஐயம்
    அகலும்; அறிவில்
உயர்ந்திடுவான் அன்னோன்
    புகழும் அனைத்துள்ளும்
புதுமை—திகழுமன்றே!
    சாதலின் இன்னாத
தில்லையென்று சாற்றிடினும்
    ஏதும் அவன் சாகுங்கால்

இன்பமே! சாதல்
வருங்கால் சிரிப்பான்
பொதுவுக்கே வாழ்வான்
பெருமக்கள் வாழ்த்தும்
பெறுவான்—ஒரு நிலவு
வானின் உடுக்களிடை
வாழ்தல்போல் அண்ணேனின்
ஊனுடம்பு தீர்ந்தாலும்
உற்றபுகழ்—மேனி
விழிதோறும் மேலோரின்
நெஞ்சு தொறும் என்றும்
அழியாதன்ரு!...........

பொன்னி 1-2-48

# விடியா விடுதலை விடிவ தெந்நாள்?

இனிஇந் நாட்டில் இங்கிலாந்தின்
கொடி பறக்காது கோலோச்சாது.
எண்ணிலா வீரர்கள் எண்ணிலாத் தீரர்கள்
கண்ணீர் செந்நீர் களங்கண்டதன்பின்
வந்தது விடுதலை, உரிமை பெற்றது.

உடல் பொருள் ஆவி உவந்தீந்தவரின்
ஈகத்தினுல்தான் எய்தினேம் விடுதலை.

ஈவதும் பெறுவதும் இல்லை விடுதலை.
சாவு ஆயிரத்தைத் தந்து பெற்றது.

வ. உ.சி, வாஞ்சி, வ.வே.சு, பாரதி
போன்ற கிளர்ச்சியின் புரட்சி யாளர்கள்,
மானம் மிகுந்த வாழ்வினர், திலகர்
காந்தி, பகத்சிங் சரோஜினி குடும்பம்
ஈ.வே.ரா. சிங்கார வேலஞர் ஜீவா
இன்னும் உயிரை எண்ணுக் கடமையர்
ஆயிரம் ஆயிரம் பேரை அளித்துப்
பெற்ற விடுதலை பித்தர்தம் கையில்
சிக்கிக் கொண்டது! திராவிடம் அழியும்!
சாதிமதத்தின் சழக்குகள் மிகுந்திடும்!
இனவெறி யாட்டம் பிணந்தின்னி யாகும்!
மொழிப்போர் மூளலாம், சமதருமத்தின்
விழிதிறவாது, வேற்றுமைச் சிக்கல்
மாநிலந்தோறும் வெறுப்பும் பகையும்
கால்கொளும்; ஏழை எளியவர் கடுந்துயர்
உள்நாட்டவரால் கொள்ளை நோய் ஆகும்.

இவற்றை எப்படி இப்பொழுதேநீர்
செப்பலாம் என்று சினப்பின், ஆட்சி

ஒப்பின வரையும் உட்கார்ந்தவரையும்
நாற்பதாண்டாய் நான் நன்கறிவேன்.
அறியாமையும் செருக்கும் கைகோத்து
அரியணை அமர்கையில் அண்ணலே ஒதுங்கினுர்.
உழுதவன் இல்லை விதைத்தவன் இல்லை
மக்களுக்குள்ள சிக்கலறுக்காமல்
எல்லார்க்கும் எல்லாம் என்னும் உரிமை
சொல்லால் செயலால் தொடவும் எண்ணிடார்
இரவில் வாங்கும் இந்திய விடுதலை
என்று விடியுமோ யார் அறிகுவரே.

பொதுநலம் 15–1–47

# ஆளவந்தார்!

ஆட்பட்டிருந்தவர் ஆளவந்தார்—நல்ல
ஆட்சி நடத்துவர் என்றிருந்தோம்—"எம்மைக்
கேட்பவர் இல்லை இனத்தின் எழுச்சியைக்
கிள்ளிடுவோம்" என்று துள்ளுகின்றார்.

வறுமை உணர்ந்தவர் ஆளவந்தார்—இனி
வயிற்றுக்குக் கஞ்சியுண் டென்றிருந்தோம்—"உங்கள்
சிறுமையை நீக்க முறையிட்டுக் கொண்டாலும்
சிறையிடுவோம்" என்று செப்பிவிட்டார்.

ஏழையர் தோழர்கள் ஆளவந்தார்—கொண்ட
ஏக்கத்தை நீக்குவார் என்றிருந்தோம்—இனி
வாழவிடோம் தொழிலாளரை, ஒற்றுமை
மாய்க என்றார் தலைசாய்க என்றார்.

நல்லறம் கேட்டவர் ஆளவந்தார்—இனம்
நாலும் ஒன்றாய்விடும் என்றிருந்தோம்—எம்மைக்
கொல்லும் அவர்கள் கை, இல்லை என்னும் நாக்குக்
கூசாது பொய்சொல்லும் தேசியத்தாள்!

உள்ளம் உயர்ந்தவர் ஆளவந்தார்—இனி
உண்மை சிறந்திடும் என்றிருந்தோம்—எங்கும்
கள்ள வணிகர்க்குக் காப்பளிக்கக் கச்சை
கட்டி விட்டார் மானம் விட்டு விட்டார்!

நிறத்திமிர் அற்றவர் ஆளவந்தார்—துயர்
நீங்கிடும் நாட்டினில் என்றிருந்தோம்—ஏதும்
அறச்செயல்காணாத ஆங்கிலேயர்க்கு யாம்
அப்பன்கள் என்றிங்குச் செப்பிவிட்டார்!

கல்வி நிறைந்தவர் ஆளவந்தார்—தமிழ்
கட்டாயம் ஆக்குவர் என்றிருந்தோம்—அதைக்
கொல்வதற் கென்றிந்திச் சாணியைக் கட்டாயம்
கொள் என்று நாட்டினிற் கொள்ளி வைத்தார்.

குயில் 1947

# திராவிடர் புரட்சி

இன்று தமிழன் முன்னேற்றத்திற்கு
குன்றளவு முள்ளாய் குறுக்கே நிற்பதும்
முட்டுக் கட்டையாய் முரண்டுபட்டிருத்தலும்
பத்தாம் பசலிகள் பழமைப் போற்றிகள்.

பெரும்பாலும் அவர் கருவுறு சாதி மதத்திலும்
உருவாகி வந்த உதவாக் கரைகள்
முந்திய மூத்த தலைமுறையினரே.

எந்த ஓர் உண்மையும் எண்ணு மனத்தினர்
இளந்தமிழ்த் தலைமுறை இன்றோ நாளையோ
கிளர்ந்தெழப் போவதில் எரிமலையாயினர்
விரைந்தொரு புரட்சி பெரியார்
அறைகூவும்நா அசைவினுல் உள்ளதே!

தொண்டு 1–8–47

## யாம் கொண்ட மகிழ்ச்சிக்கோர் உவமை உண்டோ?

எங்கள் இயக்கங்கண்டார் தமிழ்நாட்டிற் குத்தலைவர்
இந்த லோகம்
துங்கமுறும் வழிதேடித் துயரென்றும் மகிழ்ச்சியென்றும்
எண்ணு மல்தம்
அங்கத்தை ஆவியினை ஆம்பொருளைத் தாம்பாரா
தளிக்கும் நல்ல
கங்கைநிகர் உள்ளத்தார் இராமசாமிப் பெரியார்
வரவு கண்டோம்.

பயிர் போன்றார் உழவருக்குப்! பால் போன்றார்
குழந்தைகட்குப் பசும் பாற் கட்டித்
தயிர் போன்றார் பசித்தவர்க்குத்! தாய் போன்றார்
ஏழையர்க்குத்! தகுந்த வர்க்குச்
செயிர் தீர்ந்த தவம் போன்றார், செந்தமிழ்நாட்டிற்
பிறந்த மக்கட் கெல்லாம்
உயிர் போன்றார் இங்குவந்தார், யாம் கொண்ட
மகிழ்ச்சிக்கோர் உவமை உண்டோ?

கள்ளப்போக் குடையவரின் ஆட்சியினைக் கனமக்கள்
மனவெறுப்பாம்
வெள்ளப்போக் கிற்கறைக்கும் வித்தாரப் பேச்சான
முத்தா ரத்தைக்
கொள்ளப்போ முன் இங்குக் கூடியுள்ள எம்தலைவர்
தோளை எங்கள்
உள்ளப்பூங் காடாக்கி உச்சியிலே கைகூப்பி
உவகை கொள்வோம்.

சமயவெறி தணிக என்றார் சாதிவெறி தணிக என்றார்
சகோதரர் போல்
அமைக என அறிவித்தார் பெண்களெலாம் நல்லுரிமை
அடைக என்றார்
எமை அகத்தும் புறத்தினிலும் திருத்துதற்கே
எம்பெருமான் சொன்னதெல்லாம்
இமயமலை இல்லை என்று சொன்னதுபோல் எண்ணினோம்
பின் தெளிந்தோம்.

சிந்திக்க இராமசாமிப் பெரியார்! சொன்ன வண்ணம்
செய்க, நாங்கள்!
பந்தியிட்ட படைவீரர் தமிழ் நாட்டார்! அவர் தலைவர்
பயமே இல்லை;
இந்தியினை எதிர்க்க என்றார் விட்டோமா வரிச்சுமையை
விட்டோமா எம்
செந்திருவை இராமசாமிப் பெரியாரை வாழ்த்தும்
சிந்தை வாழ்க.

போர்வாள் 13–11–48

# பிரதிநிதித்துவம்—படிவம்

ஆதியில் வந்த வடமொழி அதனில்
அழகிய "பிரதிநிதி" எனும் சொற்கே
ஓதுக தமிழ்ப்பெயர் என்றான் பார்ப்பான்.

ஓதாப் பார்ப்பான் பேதமை தீரப்,
பாதியில் வந்த வடமொழியாளர்
படிவம் என்பதை அவ்வாறு பகர்ந்தனர்.

நீதெளி என்றே நிகழ்த்திய அளவில்
நின்றான் சென்றான் மறுநாள் வந்தான்.
வேதம் சொன்ன.வடமொழி முதலா?
வெறுந்தமிழ் முதலா? என்றான் பார்ப்பான்.

ஓது மறைக்குமுன் உயர்தமிழ் நான் மறை
ஓதிய மொழியே முதலெனச் சொன்னேன்.

கீதை தந்த வடமொழி பெரிதென்றான்,
கிடைக்கரும் திருக்குறள் அதற்பெரி தென்றேன்.
ஏதிது நம்திரை கிழிந்த தென்றே
ஏகினான் பின்னர்த் திரும்பவே யில்லையே!

குயில் 15-9-59

குறிப்பு:—படி என்றதை வடவர் பிரதி என்றனர் வடவர். படிவம் என்றதை அவர்கள் பிரதிநிதித்துவம் என்றனர் திநிதிகள் என்பதைப் படிவத்தார் எனல் வேண்டும்

# விடுதலை வேட்கை உயிரின் இயற்கை

மெத்தை வீட்டு வெள்ளை நாய்
வீட்டு வாசற் படியிற் போய்க்
கத்திக் கொண்டே சற்று நின்று
கறுப்பு நாயை வா என்று

கத்திக் கத்திக் கூவிற்று
கறுப்புத் தெருநாய் போயிற்று
"மெத்தை வீட்டில் வசிக்கின்றாய்
வேளைக் கென்ன புசிக்கின்றாய்?"

என்று கறுப்பு, வெள்ளையுடன்
இளித்துக் கொண்டே சொன்னவுடன்
"ஒன்றும் இங்கே குறை இல்லை
உரைப்பேன் கேட்பாய் என் சொல்லை.

அன்றன்றைக்குப் பாற்சாதம்
அப்பம் ரொட்டி நவநீதம்
பன்றியை போல் வீங்குகிறேன்
பட்டு மெத்தையில் தூங்குகின்றேன்.

இருப்பாய் நீயும் என்னோடே"
என்றது வெள்ளை அன்போடே
காதால் கேட்ட கறுப்புதான்
"கழுத்தில் வடுவாய் இருப்பதேன்?

ஏதோ சொல்வாய் என்றதே
இளித்துக் கொண்டே நின்றதே
"ஏதாகிலும் செய்யாமல்
எனது கழுத்து நையாமல்

காதோரத்தில வார்கொண்டு
கட்டிவைக்கும் வடுவுண்டு''
அதனைக்கேட்ட கறுப்புதான்
"அடிமையாய் நீ இருப்பதேன்!

கதிதான் கெடநீ நடப்பதா!
சதிராய் உன்னிடம் அண்டேனே!
சதையில் ரத்தம் சுண்டேனே!
இதனால் அஞ்சி ஓடுதுபார்!
இன்னும் ஓடுது பார்!

மன்றம் 1-5-48

# தொழிலே எழில்

தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ
எழிலே உலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பல்வகைத்
தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!

இந்த வான், மண், கனல், ஏரி, வளி தோன்று
அந்த நாள் எழுந்த ஓர் "அசைவி"னால் வானொடு
வெண்ணிலாவும், விரிகதிர் தானும்,
எண்ணிலா தனவும் எழுந்தன வாகும்.

அணுத்தொறும் இயங்கும்அவ் வசைவியக்கத்தைத்
துணிப்பிலா இயற்கையின் தொழிலெனச் சொல்வர்.

அழியா தியங்கும் அவ்வசைவே மக்களின்
தொழிலுக்கு வேரெனச் சொல்லினும் பொருந்தும்,
ஆயினும் உன்னினும் அது சிறந்த தன்று
தாயினும் வேண்டுவது தந்திடுந் தொழிலே!

மக்களின் தேவை வளர்ந்திடும் அளவுக்குத்
தக்கவாறு தளிர்த்திடு கின்ற
அறிவிலே தோன்றுவை; அந்தோள் தழுவுவை;
மறுவிலாக் கருவியில் வாய்விட்டுச் சிரிப்பை;
பொருள்பல நல்கிஅப் பொருள்தொறும் கலைத்திறம்
அருள்புரிந்து குறைபா டகற்றுவை தொழிலே!

பசித்தவன் புசித்திடப் பறப்பது போன்றஓர்
அசைப்பிலா ஆவலும் அசைப்பிலா ஊக்கமும்
அடைந்தோர் உழைத்தும் ஆயிரம் ஆயிரம்
தடந்தோள் தழுவியே கடந்தனர் வறுமை!

தொழிலே காதுகொடு! சொல்வேன்! எங்கள்
அதிர்தோள், உன்றன் அழகிய மேனி
முழுதும் தழுவ முனைந்தனர் பார்நீ!

அழகிய நாட்டில் அந்நாள் இலாத
சாதியும் மதமும் தடைசெய்யும் வலியிலே
மோதுதோள் அனைத்தும் மொய்த்தன ஒன்றாய்க்
கெண்டை விழியாற் கண்டுகொள் தொழிலே
வாராய் எம்மிடை வாராய் உயிரே
வாராய் உணர்வே வாராய் திறலே!

அலுப்பிலோம் இருப்புக் கலப்பை துடைத்தோம்
மலையெனச் செந்நெல் வழங்காம் தோளில் வா!
கரும்பாலைக்குக் கண்ணெனாம் நெய்யிட்
டிரும் பாலைக்கு வரும்பழு தகற்றினோம்.
பண்டம்இந் நாட்டிற் பல்க மகிழ்ந்துவா!

கூட்டிரும்பும் துளியும் போல எம்
தோட் கூட்டத்தில் தொழிலுன் வல்லமை
சேர்வது நாங்கள் விடுதலை சேர்வதாம்!

யாமும் நீயும் இரண்டறக் கலப்பின்
தூய்மை மிக்க தொழிலாளிகள் யாம்;
கப்பல் முடைவோம் கப்பல் கட்டுவோம்
பூநாறு தித்திப்புத் தேனாறு சேர்ப்போம்
வானூர் தியாலிவ் வையம் ஆள்வோம்!

ஐயப் படாதே! அறிவு புகட்டும்
வையநூல் பலஎம் மனத்தில் அடுக்கினோம்!
மாசு தவிர்த்தோம்! மாசிலா மணியே
பேசு! நெருங்கு! பிணை தோளொடுதோள்;
இன்பம்! இன்பம்!! இதோபார் கிடந்த

துன்பம் தொலைந்தது! தொலைந்தது மிடிமை!
வாழிய தொழிலே, செந்தமிழ்
வாழிய! வாழிய வண்டமிழ் நாடே!

முல்லை 12–2–46

## கொடிய ஆட்சி

என்ன உரிமை இது யாருக்குரிமை?
ஏதும் விளங்கவில்லை நாட்டு மக்களே
சின்ன நினைவுகளும் தீய செயலும்
தீர்ந்திடக் கண்டதில்லை நாட்டு மக்களே!

இன்னல் அடைகின்றனர் நாட்டினரெல்லாம்
இன்பம் அடைகின்றனர் ஓரினத்தவர்
என்ன உரிமை இது யாருக்குரிமை
ஏதும் விளங்கவில்லை நாட்டு மக்களே!

அடிமை படுத்தி வந்து வெள்ளையர் சட்டம்—இங்
ககன்றிடக் கண்டதில்லை நாட்டு மக்களே
அடிமைப்படுத்தி இந்த நாட்டினரையே—இங்
கழித்திடக் கருதினர் ஓரினத்தவர்.

கொடுமை படுத்திவந்த வெள்ளையர் சட்டம்—ஒரு
கோணலில்லாதபடி காப்பது மன்றி
கொடுமை அனைத்தும் இது கொடுமை என்னும்—சட்டம்
கொடியர்கள் புதுக்கினர் நாட்டு மக்களே!

விடுதலை என்றனர் நாட்டு மக்களே—அந்த
விடுதலை யாருக்கு நாட்டு மக்களே?
கெடுதல் உங்கட்கு நாட்டு மக்களே—ஒரு
கீழ்நிலை உங்கட்கு நாட்டு மக்களே!

விடுதலை அடைந்தவர் ஓரினத்தவர்—உம்மை
விழுங்கிடத் தடையில்லை அன்னவருக்கே?
இடுதலைத் தம்மவருக் கிடுதலின்றி—ஓர்
இம்மி இடுவதுண்டோ உங்களுக்கெல்லாம்?

என்னருந் திராவிட நாட்டு மக்களே—இங்
கேழ்மை உமக்குரிமை இன்பம் அவர்க்காம்!
மன்னர் தமை நிகர்த்த அதிகாரம்—மற்றும்
வாழ்வை உயர்த்துகின்ற பேரலுவல்கள்.

இன்ன பிறவுமவர் தமக்குரிமை—இங்
கீடழிந்திடல் மட்டும் உமக்குரிமை!
என்னஉரிமை இது நாட்டு மக்களே!
இன்பத் திராவிட நாட்டு மக்களே!

குயில் 1-10-48

# தெற்கெல்லை திராவிடர்க்கே

முதல்இடை கடைச்சங் கத்தின்பின்
மதத்துறை யாளரின் மடுத்துறையாக
ஆனது திராவிடம். போனது மானம்!

ஈனப் பார்ப்பனர் எடுப்பார்க் கைப்பிள்ளையாய்
எல்லா அரசரும் இடுப்பொடிந்தனர்.
பொல்லாச் சமயப் போக்கிலி கட்கெலாம்
கோயில் கட்டினர், குளத்தை வெட்டினர்.
நோயில் நொடிந்தது தமிழகம்; அயலவர்
ஆட்சி ஓங்க ஆரிய நரிகளின்
சூழ்ச்சி பலித்தது. சுரண்டினர் வந்தேறிகள்.

சமக்கிருதத்தின் சாரைப் பாம்பின்வாய்
தமிழின் தூய்மையைத் தமிழர் மேன்மையை
நச்சுப் படுத்திற்று தொடர்கதையாக
முற்றுப் பெறுமல், ஒற்றுமை யிலாத
சாதிச் சாய்க்கடையில் திராவிடர் சாய்ந்தனர்.

ஒரே நாளில் இந்திய விடுதலை உரிமை
திராவிட நாட்டிலும் சேர்ந்திடும் என்ற
நம்பிக்கைதனில் நச்சுப் புகையினை
அல்லாடிமுதல் ஆச்சாரி வரையிலும்
எல்லாரும்யாம் ஓர் இனம், இந்தியர்
கல்லாதவர் அவர் கருத்துகேட் காதீர்
எமக்களிக்கும் உரிமை அவர்க்கும் ஆம்
என்று வடக்கினர் ஆட்சி ஏறினர்.

கொன்றழிவதுவா கோளரிக் கூட்டமே
தெற்கெல்லை திராவிடர்க்கே என
அற்பருக் குரைத்து திராவிடம் அடைகவே.

திராவிடம் 10–12–47

# குறள் மலர்

திராவிட நாட்டுளீர், உங்கள் செயற்கெலாம்
அறமே அடிப்படை ஆதல் வேண்டும்.
அறம் எனல் வள்ளுவர் அருளிய திருக்குறள்!

செல்லும் வழிக்குத் திருக்குறள் விளக்கு!
மனமா சறுக்கும் இனிய மருந்து!
கசடறக் கற்க; கற்றிலார் அறிஞர்பால்
கேட்க! கேட்க!! திராவிடம் மீட்க!

ஔவையார் அருளிய ஆத்திச் சூடியின்
ஒருதொடர் தன்னை—ஒன்றுக் கான
உரையை—எப்படி ஒருவர் இலேசாய்
நினைவில் நிறுத்தி இனிதுரைப் பாரோ,
அப்படித் திருக்குறள் முனிசாமி அறிஞர்
முப்பால் ஆயிரத்து முந்நூற்று முப்பது
குறளையும் அவற்றிங்குக் கொடுத்த பொருளையும்
நினைவில் நிறுத்தி இனிது விளக்கும் ஓர்
ஆற்றல் உடையவர். அவர் திருக்குறள் மலர்
வழங்கும் நகைச்சுவை. மறச்சுவை! பிறசுவை
ஆர்ந்தசொல் அனைத்தும் பெரும்பயன் அளிப்பவை!

அரிசிமா இட்டலி அளிப்பதாய்ச் சொல்லிப்
பாசிப் பயிற்றுமி படைப்பார் அல்லர்.
அறிஞரின் பேச்சும் எழுத்தும் அருங்குறள்
தேனூற்றி னின்று செம்பில் மொண் டளிப்பவை!
குறட்பயன் கொள்ள நம்திருக்
குறள்முனி சாமிசொல் கொள்வது போதுமே.

குறள் மலர் 9–9–1950

## பகுத்தறிவிதுவா? பகுத்தறிவீரே?

எண்ணெயும் உண்மையும் இறுதியில் மேம்படும்
கண்ணீர்த் துளிகளின் கழகப் பிரிவினை
நாட்டுக் கொருநாள் கேட்டினைப் பயக்கும்.

ஊட்டம் இலாதார் உட்கோள் இலாதார்
தன்னலம் எண்ணித் தமிழ்நலம் மறந்து
புன்னலத் திற்காய்ப் பொறுக்கித் தின்னச்
செல்வ தென்பது சீர்கே டானது.
திராவிடர்க்குத தெரிந்து செய்யும் தீங்கிது.

ஓரேஇனம் ஒரே நாடு ஒருநாள் அடைவதே
சரேல்என வீழ்த்தும் தமிழரே
பகுத்தறிவிதுவா? பகுத்தறிவீரே?

திராவிடம் 15-9-52

# பெரியார் வாழ்க!

''இன்றுள முதல்வர் இனியும் முதல்வராய்
இருத்தல் வேண்டுமென் றுரைத்தார் பெரியார்''
இவ்வா றுரைத்ததில் தவறொன்றும் இல்லை.

''காமராசர் கருத்து முழுதும்
தமிழர் நலத்தையே தழுவியதாகும்
ஆதலால் அவரை ஆதரிப்பது
நம்மனோர் கடனெனப்'' பெரியார் இந்நாள்
சாற்றும் மொழியில் என்ன தவறு?

''தமிழுக்குப் பகைவர் பச்சைத் தமிழராம்
காமராசர்க்குக் கடும் பகைவர்''
என்னும் இந்தச் சூழ்நிலை தன்னில்,
காமராசரின் காலை மிதிக்க
எண்ணுவோர் தலைவர் ''பழியையே ஏற்கும்''
இவ்வாறு பெரியார் இயம்புதல் தவறு?

தாழ்நிலை அகற்றித் தமிழர்க்கு
வாழ்நிலை வகுக்கும் பெரியார் வாழ்கவே!

குயில் 25–1–57

# காதணி விழா வாழ்த்து

அரசுபெறு தமிழகம் அதற்கென்று பெற்ற
சரசுவதி நாவரசு—என்னுமிவர் தந்த
அறிவுடை நம்பி, அமுதவல்லி
பாண்டியன் என்னும் பசுங்கிளி கட்குக்
காதணி விழாஒன்று காணும் இந்நாள்
எனக்குப் பெரியதோர் இன்ப நாளாகும்!

ஏனெனில், பெற்றோர் இருவரும் பெற்ற
மூவரும் என்றன் பேரர் ஆவார்!

இன்று வரைக்கும் யான் இந்நாட் டுக்குப்
பதினாங்கு பேரரைப் படைத்துளேன் தொண்டராய்த்
தமிழகம் மீண்டபின் தமிழர் காணும்
படையில் பதினான்கு வீரர்என் அருமைப்
பச்சைத் தமிழர் பட்டா ளத்தார்!

இதனை என்னும்என் முதுமை இந்நாள்
இளமையா கின்றது; மகிழ்வெய்து கின்றேன்!

காதணி பெறுக! கல்வி நிறைக!
இல்லறம் காண்க! செல்வம் பெறுக!
குமரித் தமிழர் வாழ்வில் குறுக்கிடும்
பார்ப்பை விடாமல் பதற டித்துப்
பெரும்புகழ் பெறுக! அறிவுடை நம்பி
அமுத வல்லி பாண்டியன்
தமரொடு தமிழொடு வாழ்க தழைத்தே!

குயில் 12–5-59

# சிவாசி கணேசனார் வீட்டுத் திருமண வாழ்த்து

மாணவ நிலையில் வாழ்ந்தனர் அந்த
ஆண முகனும் அழகிய மயிலும்.
இந்நாள் அன்பினால் இணைந்தா ராகி
இல்லறம் எனும்நிலை எய்து கின்றனர்.

மாணவ நிலையோ அறிவை வளர்க்கும்
இல்லற நிலையோ இன்பம் பயக்கும்.

பண்புறு சண்முகன் தானும் பணிமொழிச்
சகுந்தலைக் கிளியும் அறிவு சான்றவர்.

இன்பத் துறையில் இறங்குமுன், பெரியோர்
அன்பு வாழ்த்தை அடைய எண்ணி
அணிபெறு மணவறை அதனில் இருவரும்
அருகருகு குந்தி அழகு செய்வார்;
எழுந்திடும் வாழ்த்தொலி!—இதுதான் திருமணம்.

பந்த லுக்குள் பார்ப்பனன் இடும் வாய்ப்
பந்தலில் நடப்பதே மணம் எனப் பகர்வது
சரிக்கருத் தன்று நரிக்கருத் தாகும்.

தின்பண் டங்கள் செறிந்த அறைக்குள்
புகும்சிறுர் போலத் திருமண மக்கள்
இன்பங் காணுமிவ் வின்பச் செய்தியே
எனக்கின் பத்தை ஈந்ததேன் என்றால்
வெள்ளம் ஆகத் தமிழர்க்கு வெள்ளியை
அள்ளிக் கொடுக்கும் வள்ளல் சிவாசி

கணேசஞர் கண்ணுனை தம்பிதான் மணமகன்,
அன்ஞர் அருமை கொழுந்திஞள் மணமகள்.
தமிழர் உள்ளத்துள் எல்லாம் வாழும்.

பெரிய வீட்டுத் திருமணம் அல்லவா?
எட்டி போலவா கசக்கும் எனக்கது?

சண்முகன் சகுந்தலை வாழ்க
என்மிகு பேறெலாம் எய்தி இனிதே!

குயில் 23-6-1959

## நான் பிறந்த உலகம் சிறந்தது!

## மார் தட்டிய வள்ளுவன்

அவ்வுலகம் நல்லதென்றான்
ஆரியன்! நான் பிறந்த
இவ்வுலகம் நல்லதென்றான்
வள்ளுவன்—அவ்வுலகம்
மேலே இருப்பதென்றான்
ஆரியன் மேலுக்கு
மேலே இருப்பதென்றான் வேள்.

மிக்குள தேவருல
கஃதென்றான் ஆரியன்
மக்களுல கிஃதென்றான்
வள்ளுவன்—மக்கள்
பெறற்தக்க தவ்வுலகென்
றான்ஆரி யன்! சேய்
பெறத்தக்க திவ்வுல கென்றான்!

அவ்வுலகால் இவ்வுலகம்
ஆனதென்றான் ஆரியன்!
இவ்வுலகின் ஏட்டுச்
சுரைக்காய்தான்—அவ்வுலகம்
என்றான் எல்லாம்
அறிந்த வள்ளுவன்! ஆரியன்
நின்றான் நெடுமூச்சு விட்டு.

ஒப்பிடும் ஆரிய
நான்மறை ஓதிய
அப்படி என் சொல் என்றான்
ஆரியன்—செப்பியதன்
அப்பன் தமிழ்நான்
மறையே அறைந்ததைத்தான்
செப்பினேன் என்றுரைத்தான் சேய்.

மருந்தென வேண்டாமே
அவ்வுலகில் என்று
திருந்தாத ஆரியன்
செப்ப—உரைத்தான் சேய்
உண்மை அதுவானல்
உபேந்திரன் என்னுமோர்
என்னும் மருத்துவன் ஏன் அங்கு?

இரப்ப ரிலா உலகம்
அவ்வுலகம் என்றே
உரைத்திட்டான் ஆரியன்!
தேவன்—உரைத்தான்
இரப்பாரை இல்லாத
ஈர்ங்கண் மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

குயில் 10–5–60

## தமிழாட்சியை விரி.
## பிறர் ஆட்சியை எரி.

**தமிழ் எல்லை நீக்கிய பிற எல்லைப் படத்தை கொளுத்து!**

வடவன் ஆட்சியை உலகம் சிரிக்கும்!—அவன்
வரைந்த ஆட்சி எல்லைப் படத்தைத்
தமிழகம் தீயில் இட்டெரிக்கும்! (வடவன்)

ஒடிந்தது வடவன் கொடுங்கோல்! கொடுங்கோல்!
உயர்ந்தது தமிழனின் செங்கோல்! செங்கோல்!
உடைந்தான் வடவன் தான் செய்த தீங்கால்!
ஒட்ட அறுந்தது பார்இந்தி பின்வால். (வடவன்)

தமிழாட்சி வாழ்த்திப் பிறஆட்சி கொளுத்து!
தமிழ்ஒன்றே வைய மொழிஎன்று கிளத்து!
தமிழர்க்கும் வடவர்க்கும் போரை வளர்த்து!
தாய்நாட்டு விடுதலை நிற்குமே நிலைத்து. (வடவன்)

தீப்பந்தம் கொளுத்திக் கையிலே தூக்கித்
திருநாட்டின் எல்லையை மட்டிலும் நீக்கிப்
பார்ப்பன ஆட்சிப் படத்தினைத் தீய்க்குப்
படைப்பாய், தாய்நாட்டை விடுதலை ஆக்கி! (வடவன்)

குயில் 7–6–60

**சிவாசி கணேசன்**
**கொள்ளை கொடுத்தார் ஐந்து இலக்கத்தை**
**கொள்ளையடித்தார் உலகப் புகழை**

*கிள்ளை படித்துக் கிளையூச*
*லாடும்பம் பாய்த்தமிழர்*
*பிள்ளை படிக்கப் பிடிப்பில்லை*
*என்றனர், ஐந்திலக்கம்*
*கொள்ளை கொடுத்த சிவாசி கணேசன்*
*குபீரெனவே*
*கொள்ளை அடித்தார் உலகப் புகழைக்*
*குறையறவே!*

குயில் **1–11–60**

## பொங்கல் வாழ்த்து

இனிமைப் பசுப்பாலில் யாம்பொங்கும் பொங்கல்
தனிமைப் புதுப்பரிதி தங்கத்து நாவுண்ண

யாமும் எம் இன்ப மகளிரொடும் மக்களொடும்
தீமை புறங்காட்டச் செந்தமிழில் அன்பிட்டுப்

பாடி மகிழ்ந்து பழம்பிசைந்த குந்துகின்றோம்
ஆடி மகிழ்ந்ததெம் அன்பின் தமிழகத்தான்!

இந்நாள் எம் உள்ளத் தெழுமோர் புதுப்பரிதி!
பொன்னுங் கருத்துக்கள் தென்னாட்டு வான்தழுவும்

எம்மைப் புதுவாழ்வில் ஏற்றும்! தமிழ் வாழ்க!
செம்மை நெறி வாழி செழித்து!

பூந்தோட்டம்

## மகிழ்ச்சி என்னே!

பொற்று மரைஒன்று பூத்தது
கீழ்க்கடல் மேல்! புதுநாள்
பெற்றோம் தைத்திங்கள் முதல்நாள் பெற்
றோம்நல்ல பேறு பெற்றோம்
உற்றார் தமிழர் ஒரே நிகர்
என்ப துணரப் பெற்றோம்,
முற்று இளங்கதிர் கண்டிந்த
வண்ணம் மொழிந்தனரே!

நத்தை இருட்டை நறுக்கி
எடுத்திட நாட்டிலெங்கும்
முத்தொளி வந்து தமிழர்
இனத்தின் முகம்விளக்க
ஒத்தவர் யாரும் உயர்வு தாழ்
வில்லை என அறிந்தே
தத்தம் வினையிலும் ஒத்தனர்
பொங்கற் சமைப் தென்றே!

ஆப்பால் அரிசி அரைப்பால்
கழைதரும் வெல்லக் கட்டிச்
சேர்ப்பால் தளதள என்று
நெருப்பில் சிறந்து பொங்க,
ஊர்ப்பால் எழுந்த பொங்கலோ
பொங்கல் ஓசையது
வாய்ப்பாட்டா? வான்பாட்டா?
வார்கடற் பாட்டா? மகிழ்ச்சி என்னே!

நன்றே தமிழர்கள் "பொங்கிற்றுப்
பால்" என நாவினிக்க
ஒன்று மகிழ்ச்சியில்
ஒன்றினமே இதை ஒப்பஎன்றும்
குன்று மகிழ்ச்சியால்
வாழியர் வாழியர் வாழியரே!
வென்றார் தமிழர் தமிழ்வென்ற
தென்றசொல் மேவுகவே.

பொன்னி 14–1–51

# தமிழ்த் தொண்டு

வயதிருபத் தைந்தினில்நான்
காரைக்கால் நகரில்
வண்தமிழால் ஏடெழுதி
வெளிப்படுத்தும் நாளில்
வெயில்நிகர்த்த முகமுடையான்
இளங்காளை ஒருவன்
மெல்லஎனை வந்தடுத்தான்;
சின்னாளின் பின்னர்த்

துயில் களைந்தேன்; உணர்வுற்றேன்
தமிழர்க்கு நானும்
தொண்டுசெய எண்ணுகிறேன்
என்றுரைத்தான்; தம்பி
முயல்கின்றார் நல்லறிஞர்
நம்நாட்டை மீட்க
முடிந்தவரை தொண்டாற்றப்
போஎன்றேன் சென்றான்.

ஒருமுப்ப தாண்டுக்குப்
பின்னொருநாள் அவனை
ஒளியிழந்த முகம்சிறிது
வெளுத்தலை ஓயா
திருமுகளைவு பேச்சோடு
கண்டுமனம் நொந்தேன்
ஏதேனும் பணம்? என்றான்,
பிள்ளைகள் எத்தனைபேர்

இருக்கின்றார் எனக்கேட்டேன்.
பணமில்லை என்றான்.
எங்குள்ளார் பெற்றவர்கள்
எனக்கேட்டேன் என்னை

இரக்கமெனும் பெருங்கடலில்
தள்ளினான். உற்றார்
எவருமே நினைவில்லை
என்பதையும் சொன்னான்.

வீடுதமிழ் நாடுதான்!
தமிழரெலாம் கிளைஞர்
விண்தட்டி மேலெழுந்த
மண்படுக்கை யாகும்;
வாடுபசி நேரத்தில்
எவரேனும் ஒருவர்
வா, என்றால் சாப்பாடு!
காதலெலாம் என்றன்

நாடுநலம் பெறும்வண்ணம்
நான்சிறிது பேசல்!
நாலுபேர் என்பேச்சுக்
கிணங்குவதே இன்பம்!
ஈடுபட்ட நாள்முழுதும்
இப்படியே! ஐயா
இன்றுநான் செயத்தக்க
தென்னவென்று கேட்டான்.

தமிழ்நாட்டின் அதிகாரம்
தமிழனிடம் இல்லை.
தமிழ் உயர்ந்தால் தமிழ்நாட்டின்
நிலைஉயரும் அப்பா,
தமிழ்நாட்டில் தமிழன்நிலை
எத்துறைநோக் கிடினும்
தலைக்குனியத் தக்கவாம்
எவர் அறியார் இதனை!

நமக்கெல்லாம் நாட்டுரிமை
வந்ததென்கின் றார்கள்
நமைவீழ்த்த நமக்குரிமை
என்பததன் பொருளாம்!
தமிழ்த்தொண்டுத் தொடங்கென்றேன்!
பணம்எடுத்தேன் வாங்கத்
தான்மறந்தான்; தமிழ்தாழ்ந்த
தேன்எனப் பறந்தான்!

தமிழ்முரசு 6



பூ-நா-73—8

## ஓய்வு பெற்றேன்

எட்டுப் பதினொன்று
  நாற்பத்தாறிட்ட எழிலுறு நாள்
விட்டுப் பிரிந்ததென்
  ஆசிரியப் பணிமேலும் எனைக்
கட்டுப் படுத்து
  வதொன்றில்லை திங்கள் கடைசிதொறும்
தட்டாது வந்திடும்
  ஐம்பான் வெண்பொற் காசு சம்பளமே.

பா. குயில் 10-7-67

## மான மறத்தி

திருப்பத்தூர்க் கடுத்த சிற்றூர் ஒன்றில்
விருப்புற்று மணந்த கணவன், வெறிநாய்
தெருத்தொறும் சுற்றிச் சீரழிதல்போல்
பொருளை விரும்பும் ஒருசில குச்சுக்
காரிகள் பின்னல் கழித்தான் பலஇரா.

ஓரிரா வீட்டுக்கு வந்தான், மனைவியை
வேண்டினன்; விரும்பி மணந்தவன் தன்மனை
தாண்டினன் கட்சிவிட் டோடும் தலைவன்போல்.
தப்பினை ஒப்பா தமிழச்சிஅவள்
கண்டதைக் கேட்டதைச் சொல்லிக் காட்டித்
தான்அப்படித் தவறுசெய்து மீண்டால்
ஊனில் உயிர்ஒட்டி யிருக்குமா என்ருள்.

உரிய மனைவியின் உரிமைக் குரலோ
விரியும் மின்னல் வெட்டெனக் கேட்டது.

கேட்டதும் கீழிருந்த விறகுக் கட்டையை
ஓட்டினன் மங்கைமேல், ஒதுங்கினள் மனைவி.
வீசிய கட்டை வாசலில் தூங்கிய
ஓராண்டுக் குழந்தையின் உயிரைக் குடித்தது.

பேராற்றைப்போல் பேசிடவில்லை,
எறிந்த கட்டையை எடுத்துக் கணவனைக்
குறிபார்த் தடித்தாள், தப்பவில்லைகுறி!

வழக்கு மன்றில் வந்து நிறுத்தினர்;
"ஒழுக்கம் தவறினன் ஓரேஒரு மகனையும்
சாகடித்தான் சாகடித்தானைச்
சாகடித்தேன்நான் சாகடிக்கும் சட்டம்
உங்கட் கிருப்பதை ஒப்புகின்றேன்;

எங்கோ எவனோ எப்பொழுதோ தன்
கங்குல் மனத்துக் கருஞ்சட்டம் அது.

எங்கள் வழக்கு தீர்ந்து முடிந்தது;
உங்கட் கென்ன உரிமை இருக்கின்றது?
கொலைக்கும் உமக்கும் தொடர்பிலை, ஆனால்
கொலைபுரிந் திடநீர் கொடுக்கும் தண்டனை
கூலிக் குரியது; இருகொலை முடிந்தது;
மற்றொரு கொலையைச் சட்டம்
குற்றமாய்ச் செய்தல்ஏன் என்றாள், மறத்தியே!

பொதுவாழ்வு 15–10-59

## யாருக்கு வாக்குச் சீட்டு?

உழைக்கும் மக்களே ஆட்சிக் குரியவர்
அழைப்பீர் அவர்களைத் தேர்ந்தெடுத் தனுப்புவீர்.

அரசியலையே தொழில் ஆக்கிக் கொண்டவர்
சுரண்டல்பேர் வழிகள், நாட்டின் துரோகிகள்.
அனைத்துடைமையும் மக்களுக் காமெனும்
நினைப்பில்லாதவர் நேற்றே இறந்தவர்.

கண்ட இடமெங்கும் செத்த கொள்கைகள்
உண்டு கொழுக்க ஊரை ஏய்க்க
எத்தனை கட்சிகள் எத்தனை கொள்கைகள்
அத்தனையும் இந்நாட்டுக் குழைத்திடும் எண்ணம்
அணுவள விருப்பினும் அனைவரும் ஒன்றாய்
இணைவது தானே இயல்பு, சிறப்பு!

வேற்றுமை எந்த உருவில் விளையினும்
வேற்றுமை தானே ஒற்றுமை ஏது?

தேர்தலில் நிற்கும் தில்லு முல்லுக்
காரர் அனைவரும் காசு பதவி
அதிகாரத்திற்கே ஆலாய்ப் பறப்பவர்,
குதிக்கும்இக் கொண்டான் மார்களை நாட்டில்
தேர்ந்தெடுத் தனுப்புதல் திருடரை
தேர்ந்தெடுத் தனுப்பும் தீமை ஆகுமே!

தொண்டு 1–4–52

## பொங்கல் நாள் செய்தி

தொழிலாளிகட்குப் பொங்கல்
நாளிலே சொல்வதொன்று;
எழிலாளி யாக வையம்
இன்புறச் செய்பவர்நீர்
தொழில்வேறு வேறானாலும்
தொழிலாளி எனும்பொதுப்பேர்
வழிநாளாய் காலந்தோறும்
வகுப்பதேன், சிறப்புமக்கே!

கொழித்திடும் செல்வமெல்லாம்
கோலங்கொள் நாகரீகம்
விழித்திடச் செய்வதெல்லாம்
வியர்வையும் உழைப்பும் அன்றோ?
வழித்தடம் மானுடத்தின்
வாழ்வெலாம் உம்மாலன்றோ!
செழித்திடப் பிறர்க்குழைக்கும்
செல்வர்நீர்! வாழ்வில் ஏழை!

இதற்குள காரணத்தை
எண்ணிடா துழைப்பதாலே
முதுகினில் ஏறி ஏய்ப்போர்
முற்றுமே சுரண்டி வாழ்ந்தார்
முதலாளி நிலைக்கிறார்கள்
மூற்றுமை ஒற்றுமைக்கண்
முதுகெலும் பாகச் செய்யார்
முரண்பட அனைத்தும் செய்வார்.

உழைப்பவன் ஒருவனுக்கே
வாழ்ந்திட உரிமை உண்டு, ஆம்;
உழைப்பிலார் அட்டை; உண்ணி,
புல்லுருவிக்கூட் டத்தார்!
அழையுன்றன் தொழிற்கூட்டத்தை
அனைவரும் ஒற்றுமைக்குள்
தழைத்திடும் வாழ்வு காண்பீர்!
பொருளாளி தரையில் வாழான்.

பொங்கற் புதுநாளில்
ஒற்றுமை பொக்கிடுக
தங்கிற்று வாழ்வின்
ஒளி.

புரட்சி 14-1-53

## கடவுளை நம்பினோர் கைவிடப்பட்டார்

ஊர்ஊருக்கும் ஊரில் உள்ள
ஒவ்வொரு தெருக்கும் உருப்படாதவர்
கடவுளை நம்பினோர் கைவிடப் படார்என்று
கோயிலை எழுப்பிக் கும்பிட் டலைகிறார்.
வாயிலில் பார்ப்பான் வயிற்றுப் பிழைப்புக்கு
கல்தச்சுக் கேற்ற சொல்தச்சு செய்கிறான்.

காலங் காலமாய்க் கடவுளை வணங்கியும்
வயிற்றுக் கிலாது வறுமையில் வாழ்பவர்
வாழ்க்கையின் வசதி சிறிதும் இலாதவர்
தொழில்இல் லாதவர், தொழில் செய்தாலும்
மனித உழைப்பே மலிவாய்ப் போய்விடும்;
நோய்நொடி நூறு நொறுக்கித் தின்றிடும்;
இத்தனை பேரும் கடவுளை நம்பினோர்
ஆனால் அவர்கள் கைவிடப் பட்டார்.

கடவுள் நம்மைக் கைவிடுவ தேனோ?
கும்பிட்டுக் கடவுளை நம்பினோர்தமை
உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி
இருக்க இடமின்றி விரட்டுகின்றதே.
நம்மைத் தாழ்த்தி நசுக்கி ஒடுக்கிச்
செம்மையாய்ப் பிழிந்து சுரண்டும் செல்வர்க்கு
மட்டும் கடவுள் வாரி வழங்குதோ?
இருப்பவன் இல்லான் என்னும் இரண்டினம்
தெருத்தொறும் ஊர்தொறும் வெறுப்பை வளர்த்து
நாட்டினில் மக்களை நலிவிக் கின்றதே.
ஏழையை அழித்துச் செல்வரை வளர்க்கும்
ஓர வஞ்சனை உள்ளதோ கடவுட்கு?

ஒருநாள் ஓர்உந்து வண்டி முரண்டி
தெருநடைப்பாதை சேர்ந்த கடவுட்
கோயிலில் மோதிட குமைந்தது கடவுள்,
வண்டியில் வந்த ஒருபது மக்கள்
திண்டி வனத்துத் தெருவில் இறந்தனர்.
மற்றவர்க்குக் கைகால் மண்டையிலே அடி.

தன்னைக் காக்கத் தெரியாக் கடவுள்
தன்னை நம்பிய மக்களைக் காத்ததா!

இன்றைய அரசியல் எத்தர்களைப்போல்
அன்றைய ஆரிய எத்தர்கள் தந்த
பிணக்கேற்படுத்தும் கடவுளைக்
கணக்குத் தீர்த்தல் மனிதர்தம் கடமையே.

சீர்திருத்தம் 1-8-56

# ஜப்பானில் விழுந்த குண்டு தப்பாது உலகழிக்கும்

இரோஷிமா நாகசாகி
எனும் இரு ஊரில் வைய
விரோதிகள் வீசிஞராம்
வெடி குண்டை; எரிமலைத் தீ
சரேலெனக் கவிழ்ந்ததைப்போல்
சாவில்பல் லாயிரம் பேர்
ஒரே விஷப் புகை நெருப்பால்
உருவிலா தழிந்தாராமே.

நானிலம் அனைத்தும் உள்ள
நச்சும்பாம் பனைத்தும் கூட்டி
வானில்ஓர் அணுக்குண் டாக
வன்பகை நெருப் பழுத்தித்
தான்பொழிந் தாஞே பாவி?
அமெரிக்கக் கொலைப் படைக்குத்
தான்தோன்றி தனத்துக்கெல்லாம்
ஜப்பானில் தாஞ ஆட்டம்?

இன்னும் ஓர் நூருண்டுக்கும்
இரண்டூரின் சுற்றுப் பக்கம்
ஒன்றுமே முளையா தாமே
வாழ்தலும் ஒண்ணு தாமே.
ஒன்றுகேள், மு நலாளித்துவம்
உலகினை அழிக்கும் முன்னம்
நன்றுநாம் செய்தல் எல்லாம்
நாமதை ஒழித்தல் வேண்டும்.

பராபரக் கண்ணி பாடி
பனிமலை குமரி எல்லைத்
திராவிட நாட்டில் மேனாள்
தீயெனப் பாய்ந்த பார்ப்பார்
ஒரேஇனம் என்று சொல்லும்
அமெரிக்கர் உருவினுக்குள்
இரோஷிமா நாக சாகி
எரிந்ததே; இடிந்ததுள்ளம்.

வந்தேறி கண்டம் தோறும்
வாயினில் விழுங்கிக் கொல்லும்
அந்தோபாம் அழிவுக் கஞ்சா
அமெரிக்கச் சுரண்டல் காரர்
நொந்தே நாம் அழிவதற்குள்
நொறுக்கிட வேண்டும் அன்றோ!
செந்தேனைப் பொழிவதைப் போல்
செந்நீரைப் பொழிவோம்; வெல்வோம்.

ஒருசிலர் அதிகாரத்தின்
வல்லர சுரிமை காக்க
உலகமே தீக்கா டாக்கி
உயிர்க்குலம் அழிக்கும் ஈனர்
பலத்தினை ஒடுக்க வேண்டும்;
வையப் பாராளு மன்றம்
புலம்பலில் பயனே இல்லை
பொசுக்குக போர் மூலத்தை!

உலகநா டெங்கும் உள்ள
உழைப் பாளர்க்கென் விண்ணப்பம்
உலகத்தில் அமைதி வேண்டின்
அனைவரும் ஒரு சிலர்க்காய்ப்

பலம்தரும் படையில் சேரப்
படாதுநாம் விலக வேண்டும்
இலகுவில் வையம் போரின்
இழிவெண்ணம் மடிந்து போகும்!

ஜப்பானில் வீழ்ந்த குண்டு
சர்வாதி கார ஆட்டம்
இப்பாரை இனிக் கலக்கி
இனி வருங்கால மின்றி
தப்பாது செயினும் செய்யும்,
தறுதலை முவலாளித்வம்
எப்போதும் நமைவிடாது
செய்வன இன்றே செய்க.

பகுத்தறிவு மலர் 1942

## வியத்நாமிலிருந்து விலகுக எச்சரிக்கை

வையப்போர் முடிந்ததென நினைக்கும் நாளில்
வல்லரசின் திமிரொடுங்க வில்லை! கீழை
கைவைத்த பிரான்சுநாட் டடியிருந்து
கடுமைமிகு விடுதலைப்போர் வியத்நாம் கண்டு

மெய்யுயர்த்தி மேம்பாட்டிற் குழைக்கும் வேளை
வீடிழந்தார் விளைவிழந்தார் உறவிழந்தார்
கையுழைப்பால் தலைதூக்க நினைக்கும் காலை
கயமைமிகும் அமெரிக்கா கால்நீட்டிற்றே.

மனவலிமை குன்றாத வியத்நாம் மக்கள்
மறுவாழ்வில் ஊடுருவும் முதலாளித்துவ
மனப்போக்கை முறியடித்தல் உலக நாட்டு
மன்றத்தின் முதற்கடமை ஆகும். ஒவ்வோர்

இனமக்கள் வாழ்நாடும் அவ்வவர்க்கே
எனும்உணர்வு விழிப்புணர்ச்சி இயற்கை;எந்த
இனமற்ற அமெரிக்க வெறிநாய்கட்கே
இனமேது? ஏதுமொழி எச்சிற் சோறே.

அமெரிக்கக் காலடியில் வியத்நாம் மக்கள்
ஆயிரம்ஆண் டானாலும் பணிவ தில்லை;
திமிருற்ற ஏகாதி பத்தியத்தைத்
திசைதோறும் எதிர்க்கின்றார்; அவர்நாட்டாரே

குமுறுகிறார், கோணல்மன அமெரிக்காவே
குடியரசின் பேராலே அடிமை கொள்ளல்
இமயத்தின் எல்லையிலே காலைநீட்டும்
சீனரைப்போல் இழிவெதற்கு? படைவிலக்கு!

சான்றோர்கள் உன்முகத்தில் காரி துப்பும்
சாய்க்கடையாய் அமெரிக்க அரசியல்சீர்
தான்தோன்றித் தனமாக நடப்பதெல்லாம்
தரங்கெட்டுப் போவதையே காட்டும்; நாட்டில்

ஊன்றிஎழும் நிறவெறிப்போர் களையவில்லை;
உலகமக்கள் உறவென்னும் அன்பும் இல்லை;
ஈன்றவரும் வெறுக்கும்வண்ணம், வியத்நாம் வீரம்
இடுப்பொடித்துப் போடும்உனை எச்சரிக்கை!

புத்தறிவு 1-8-61

## உலகுக்கு மீட்சி உண்டா?

புத்தர்—பெரியார்—வள்ளுவர்

கந்தை உடை உடுத்துக்
    கைப்பிள்ளை தானேந்தி
வந்தாள் ஒருத்தி
    ''வழியேதும் இல்லை உங்கள்

வீட்டில் இட்ட வேலை செய்வேன்
    வேண்டியதெல்லாம் என்றன்
பாட்டுக்குத் தக்கபடி''
    என்று சொன்னவுடன்

சோறுதருவ தென்றும்
    திங்கள் தோறும் வெள்ளி
ஆறு தருவ தென்றும்
    வேலைக் கமர்த்திடவே

இட்டபணி செய்தாள்
    நடுப்பகலில் என்மனைவி
வட்டிலிலே சோறு கறி
    வட்டித்தே உண் என்றாள்.

'சாலையிலோர் வீட்டுச்
    குறட்டில் என் தாய் ஒருத்தி
மேலும் இரண்டு பேர்
    தங்கயரை வெம்பசிதான்

வாட்டி வருத்தும் இந்த
    வட்டிலொடு போய் அவர்க்கே
ஊட்டி வர வேண்டும்''
    ''என்றே? உரைத்து நின்றாள்

ஊனன்றோ? ஊட்டுவதேன்?
என்றுரைத்தாள் என் மனைவி
'கண்ணில்லார் மூவரும்'
என்றால் கலங்கும் கண்ணுடைய

என் மனைவி நெஞ்சம்
இரங்கியே "நீ ஓடி
அன்னவரை இங்கே
அழைத்துவா" என்றுரைத்தாள்.

சாய்வு நாற்காலியிலே
சாய்ந்திருந்தேன் என் எதிரில்
தாய் இரண்டு பெண்கள்
தலைமகளின் கைப்பற்றி

வந்து வரிசையாய்
நின்றார்கள் பிள்ளைக்குக்
குந்தியே பாலூட்டிக்
கொண்ட வேலைக்காரி

மூவர்க்கும் சோறூட்டி
மூன்று விரல் தானுண்டு
யாவருக்கும் நெஞ்சில்
இரக்கத்தை ஊட்டி நின்றாள்.

"ஏழைப் பணிப் பெண்ணே
இந்த நகர மன்றம்
ஏழைகளுக்கே தேனும்
ஏற்பாடு செய்திலையோ"

என்று நான் கேட்டவுடன்,
"இந்த நகர மன்றம்
ஒன்று மில்லா எங்கட்கா
ஒத்தாசை செய்யுமெ"ன்றாள்

எண்ணக் கடலிலே நான்
ஆழ்ந்தேன் இக்கிழவி
கண்ணில்லாள் காமத்தை
வென்றிருந்தால், இன்றிந்தப்

பெண்ணிரண்டும் ஏழைப்
பெரிய பெண்ணும் பிள்ளையும்
உண்ணுதற்கும் கட்ட
உடைக்கும் சிறிதேனும்

ஒத்தாசை யற்ற
உலகில் பிறந்தழியார்!
தொத்து நோய் காமம்
வந்து தொட்டு விட்ட போதிலுமே

கற்றவர்கள் சொல்லும்
கருத்தடை முறைகளைப் பின்
பற்றிருந்தாலும்
பழி நேர்ந்தி ராதன்றோ!

கண்ணிலார் இம்மூவர்
மட்டுமா? எண்ணிலார்?
எண்ணிலார் காதிலார்!
காலிரார், கையிரார்

எண்ணிலார்! எண்ணிலார்
எண்ணிலார்! ஏதிருந்தும்
உள் நிறை வில்லார்
உலகத்தில் எண்ணிலார்

தப்ப முடியாத
சாவுகள் மூப்பு நோய்
எப்புறமும் உண்டன்றோ,
முப்போதும் துன்பன்றோ

புத்தர் பிரான் அன்று கண்ட
பொல்லா உலகென் முன்
பொத்தெனுக்கு தித்தது, நான்
''போ'' என்றேன்; போகவில்லை

எண்ணிப்பார் என்றுரைத்தான்
எங்கிருந்தோ புத்தர் பிரான்
எண்ணக் கடலினின்
றேற வில்லை நானும்.

மக்களெலாம் காமத்தை
மாய்க்கத்தான் வேண்டுமா?
மக்கள் வரும் வாயில்களைச்
சாத்தத்தான் வேண்டுமா?

யாரும் பிறவாமை
இன்ப நிலைதானு?
பாரில் பிறப்பு நிலை
பட்டழிய வேண்டுமா?

ஈராயிரத்தைந் நூறி
யாண்டின்முன் இவ்வுலகில்
சீரார்ந்த புத்தர் நெறி
இன்னும் சிறக்குமா?

ஈரோட்டார் என் பெரியார்
"மக்களிலே தாழ்வுயர்வுப்
போராட்டம் வேரற்றுப்
போனுல் உலகில்

நலிவில்லை எய்தும் நலம்
என்றருளினுரே!
தலையின் மேற் கொள்ளவே
தக்கதன்றோ அன்னதுவும்?

வள்ளுவனார் இப்பெரிய
    வையத்தைக் காப்பதற்கோர்
தெள்ளு தமிழ்ப் பாட்டும்
    செப்பினர்—அஃது
பகுத்துண்டு பல்லுயிர்
    ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்று
    ளெல்லாம் தலை!

குயில் 8–9–75

## உலகம் உன் உயிர் உன் உயிர் இவ்வுலகம்

ஒவ்வொரு நினைவும், உன்றன்
உலகிற்கே! செயல் ஒவ் வொன்றும்
இவ்வைய நன்மைக்கே என்
றெண்ணுதல் பெற்று யாகில்
செவ்வையாம் நினைவுண்டாகும்;
செயலெலாம் நல்ல வாகும்!
அவ்"வானின்" நோக்கம் காண்பாய்!
அதன்பெருஞ் செயலைக் காண்பாய்!

உன் வீட்டைப் போற்றுகின்றாய்
ஆயினும் உன்றன் வீட்டில்
பின் வீட்டைக் கெடுக்க எண்ணல்
பேதமை யாகும் அன்றோ?
உன் வீட்டுக் குப்பை தன்னை
அயல் வீட்டில் ஒதுக்கல் வேண்டா!
பொன்என்றே உன்றன் ஊரைப்
புகல்வதில் பிழையே இல்லை.

ஆயினும் அயலார் தன்னை
அழித்திட எண்ண வேண்டா
தூயஉன் வாய்க்கால் நீரைத்
துய்ப்பாய் நீ; அயலூர் நோக்கிப்
பாயும் நீர் அதிலே நஞ்சு
கரைப்பது பழுதே யன்றோ?
தீயன தவிர்த்த நெஞ்சம்
வையகம் செழிக்கும் வித்து.

உன்பிறஞ் சிந்தி யாநல்
லுணர்வுக்கும் ஒழுக்கத்திற்கும்
தன்மானத் திற்கும் ஏற்ற
தன்மையில் இருப்ப தாயின்

அன்புகொள், நாளும் போற்று
மற்றுமுன் அணித்தாயுள்ள
பொன்நகர் எதிர்த்தல் வைய
முற்போக்கை எதிர்த்தல் போலாம்.

அயலூரிச்சட் டத்திற் கேநீ
ஆட்பட வேண்டும் என்று
மயலூர்ந்த நெஞ்சத் தார்கள்
வாய்ப்பறை அடிப்பாராயின்
துயிலாதே அவர்கள் சட்டம்
துன்பத்தை விளைப்பதாயின்
ஞயம்பட உரை உன் அன்பின்
நானில நன்மை கோரி.

திராவிட நாட்டை மீட்பாய்
எதிர்த்தாரைத் திறத்தால் வெல்வாய்
உரையினால், நினைவால் உன்றன்
உடலினால் வடவர் நாட்டுக்
கொருதீங்கும் செய்தல் வேண்டாம்.
உலகினை ஒழிக்க வேண்டாம்!
பெருநாவ லந்தீ வின் மேல்
பேரன்பு கொள்ள வேண்டும்.

பிற நாட்டை எதிர்க்க வேண்டா
பிழைநாட்டம் உலகின் வீழ்ச்சி!
அறமென்றால் நல்ல பாதை!
அதனைநீ வகுக்கும் போது
நிறைந்துள சிற்றூர் பேரூர்
நீள்நகர் நாடு வையம்
சிறந்துள்ள மக்கள் யார்க்கும்
தித்திக்க வகுத்தல் வேண்டும்.

உன்தேவை அயலான் தேவை
இரண்டையும் ஒன்றாய்ச் செய்க
உன்னூரின் நடையுடைகள்
அயலூரோ டொற்றுமை செய்
நன்னினை வென்பதெல்லாம்
நானிலப் பொது நினைவே
உன் எண்ணம் உலகோர்க் கெல்லாம்
ஒக்குமேல் செயற்படுத்து.

இருநாட்டில் ஒன்றை ஒன்று
பகைத்திடச் சட்டம் ஏதும்
புரிந்திட வேண்டா உன்னைப்
பிறநாட்டானிடம் ஒன்றுக்கு
விரைந்துமே அண்டை நாட்டை
விழுங்கிட நினைத்த தாலே
குருதியில் மிதந்த மேனி
எத்தனை கோடி யப்பா!

மதத்தினைக் கொன்று போடு
சாதியை மனதில் வையேல்
எதுபிறர்க் குத்தீங் காமோ
அதனை நீ அகற்ற வேண்டும்.
புதுவினை செய்க அஃது
பொதுநலம் ஆதல் வேண்டும்
இதுசெய்க போர்கள் இல்லை
இன்பநல் லுலகைக் காண்பாய்!

குயில் 1–10–48

# பொன்னி

பொன்னியின் அழகிய பொங்கற் புதுமலர்
என்னுள்ளத்தில் இன்பம் பெய்ததே!
இராத தொன்றைத் திராவிடர் பால்
இருப்பதாக்குவ திந்தப் பதிப்பாம்!

உயர் கருத்து நல்கும் ஓவியம் கண்டேன்
அயர்வகற்றும் அறிஞர் கட்டுரைகள்!
கண்டேன்! கவிதைக் கனிகள் கண்டேன்!

எங்கணும் பொன்னி எவர் நினைவிலும்
பொன்னி என்னும் புகழ்க்குக் காரணம்
தமிழ்மாட் டன்பும், தகுதிரா விடரின்
இழிவை எதிர்க்கும் எண்ணமும், கலையில்
ஆர்வமும் தெளிந்த அறிவும் உடைய
பெரியண்ணன் முருகு பெரிதுழைப் பாகும்.
அவர்கள் நீடு வாழ்க!
சுவைதரு பொன்னிச் சுவடி வாழியவே!

குயில் 1–2–48

## மன்றம்

மன்றம் என்பதோர் மாத இதழை
இன்றெம் தோழர் எழில் நெடுஞ்செழியனார்
எழுதி வெளியிட இசைந்ததைப் போற்றுதும்
எழுது புலமை முழுதுளார் ஆதலின்.

அன்னார் கருத்தை அமுதாக் கொள்ளுதும்
பன்மொழிப் புலமை படைத்தார் ஆதலின்.

மன்றம் நன்று வாழ்க
என்றும் நெடுஞ்செழியனார் இனிது வாழியவே!

குயில் 1–3–48

## நிலவு

நிலவின் பொங்கல் மலர் ஒன்று வந்தது
பலரின் கட்டுரை, பலரின் கவிதைகள்
அழகு செய்வன அறிவை வளர்ப்பன
ஏடெழுதும் தமிழ் எழுத்தாளர்க்குள
பீடெலாம் கணேசன் பெற்றிருக்கின்றான்;
அன்னோன் செந்தமிழ் ஆய்ந்தவன்; நிலவு
தன்னை நடாத்தத் தகுதிறன் உடையான்;
தோழன் கணேசன் வாழ்க!
வாழ்க நிலவு திராவிடம் வாழ்கவே.

குயில் 1–3–48

## கார்ல் மார்க்சு

காரல்மார்க்ஸ் என்னும் கவினுறு நூலை
அழகிய முறையில் அளித்தோன் சதாசிவம்
'இன்ப வாழ்வுப் பதிப்பகம்' இதனை
நன்று வெளியிட்டு நமக்குத வியது.
அனைவரும் இதனை ஆதரிக்க
மனவிருள் அதனை மாற்றுதற் கென்றே.

குயில் 1–3–48

## ஈரோட்டுத் தாத்தா
## கொய்யாக் காதல்

ஈரோட்டுத் தாத்தா
எனும் திராவிடர்க்கழகத்
தேரோட்டுவார் பற்றிச்
செய்யுள்நூல் சீரோட்டத்
தோதிருக்கச் செய்தளித்தான்
நாச்சியப்பத் தோழன்அதை
ஆதரிக்க ஐயமில்லை நாடு.

மேலும்கொய் யாக்காதல்
விண்டான் அவனே மேன்
மேலுமது வெல்க இனிது.

குயில் 15–6–48

## போர் வாள்

போர்வாள் நமக்களித்தோன்
　　பொங்கல் மலரும் கொடுத்தான்
பார்மேல் திராவிடர்நாம்
　　பாய்ந்து பகை எதிர்ப்போம்
தாரணிவோம் வெற்றித்
　　தனிமுரசம் ஆர்த்திடுவோம்
வார்புகழ்கொள் மாணிக்க
　　வாசனுர் வாழியவே!

பொங்கல் மலரில் புதிய கருத்துக்கள்
செங்கரும்புபோலும் தெவிட்டாத பாட்டுக்கள்
அங்கங்கிருந்த அழகுசெயும் ஓவியங்கள்
இங்கு நமக்கின்பம் விளைத்தன வாழியவே!

குயில் 1–3–48

## தனித்தமிழ்க் கிளர்ச்சி

தனித்தமிழ்க் கிளர்ச்சி எனுமொரு நூலைத்
    தனித்தமிழ்ச் செய்யுளால் உள்ளம்
இனித்திடத் தந்தார் புலவர்சண் முகனார்
    இத்தமிழ் நாட்டினில் இதனில்
மனைக்கொரு படிஎன வாங்குக! நாளும்
    மணிக்கொரு முறைஅதைப் படிக்க!
தினைத்துணை உழைப்பில் பனைத்துணை பயனைச்
    சேர்க்கும்இந் நூல்எனல் மெய்யே!

குயில் 15–5–48

## இல்லப் பெயர் அகரவரிசை

கனிதமிழ் பாதுகாப்புக் கழகத்தார்
    வெளியிட்டுள்ள
இனிதான இல்லப்பேர் அகரவரி
    சைநூல் கண்டேன்
தனதுபேர்க் கொத்தவாறு நூலில்லை
    சமையப் பேர்கள்
நனிஉள, இதனால் நாட்டுமக்கட்கு
    நன்மை இல்லை.

குயில் 15–6–48

## இராவணன்

பகுத்தறிவுக் கொத்தபடி
இராவணநா டகமதனைப்
பகர்ந்தான் கண்டீர்

மிகுத்த அழகான தமிழ்
மிடுக்குநடை யாற்கரந்தை
வேலன்! அன்னோன்,

தொகுத்த புகழ் சிறிதன்று
அளித்த நலம் சிறிதன்று
தூய் தமிழ்க்கும்

புகுத்தரிய புகழ்தனையும்
புகுத்தி விட்டான் திராவிடர்கள்
புகன்றார் நன்றி.

பழம்பெரிய திராவிடத்தைப்
பறித்தார்வேர் பறிப்பதற்கோர்
வழிதானுண்டு

வழங்கிதிகா சப்பெயரால்
திராவிடர்சீர்மறுத்தார் சொல்
மறுக்கும் வண்ணம்

முழங்குதல் வேண்டும் பண்டைத்
திராவிடர் தம்பழம் பெருமை
புதிய நூலில்,

எழுந்த உணர்வாற் புதிய
இராவணன் தந்தான் வேலன்
என்றும் வாழி!

குயில் 14-10-47

# ஆட்சிச் சொல் அகர வரிசை

திருநெல்வே லிச்சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் போலும்
ஒருநல்ல தமிழ்வளர்க்கும் நிறு வனமும்
கண்டதில்லை உலகில்! அந்த
உரைமல்கு நிறுவனமும், முப்போதும்
தமிழுக்கே உழைக்கத் தக்க
பெருநல்லான் தமிழ்புலவன் சுப்பையன்
போற்பிறரைப் பெற்றதில்லை.

நூலெல்லாம் விளையுமங்கே, நூறுயி
ரக்கணக்கில்! நூல்ஒவ் வொன்றின்
மேலெல்லாம் அழகுசெயும் சுப்பையன்
மிகுதிறமை! அதுவு மின்றிக்
காலெல்லாம் சிலம்பொலிக்கத் தமிழரசி
உலகரங்கு காணும் வண்ணம்
தோலெல்லாம் சுளைப்பயன்கொள் புதுப்புது நூல்
தோற்றுவிப்பன் அந்த மேலோன்.

அவ்வகையில், ''ஆட்சிச்சொல் அகரவரி
சை'' என்னும் நூலும் ஒன்று
செவ்வையுற ஆங்கிலத்தில் பெயர் காட்டித்
தனித்தமிழில் பொருளும் காட்டி
இவ்வகையில் இவ்வாட்சிச் சொல் குறிப்ப
தேற்ற தெனும் தெறிவைச் செய்தான்
எவ்வெவர்க்கும் பயன் விளக்கும் இந்நூலை
ஆதரிப்பார் எவரும் நன்றே.

குயில் 15–5–48

## போர்வாள்

கதை அமைப்பில் கடல் அலை போன்ற
தொடர்பும், விறு விறுப்பும் தோன்றுதல் கண்டேன்.
கதை யுறுப்பினர் பேச்செலாம் காணில்,
புதிய இலக்கியப் பூக்கா டென்னலாம்.

தேனீக் கூடுபோல் நானில மக்களின்
உளந்தொறும் புகுந்தே உருவழித்து வரும்
மடமை வழக்கம், வஞ்சம் இவைகளை
இடந்தொறும் தேடி எடுத்துக் காட்டியும்,
கடிந்தும், உண்மை இதுவெனக் கழறியும்
நல்லதோர் உலகுக்கு மக்களை நடத்திச்
செல்லுகின்றார் தோழர் சிற்றரசு
போர்வாள் இயற்றிய புலமை ஒன்றினால்!
சிற்றரசு மேலும் திராவிடர்க்கு
நற்றமிழ் நாடகம் நல்குக வாழியே!

குயில் 15–5–48

## நவீனம்

நவீனம் என்னும் நல்லிதழ் பார்த்தேன்
சுவையுறு கருத்துள தூய கதைகளும்
அறிஞர் கட்டுரைகளும் அழகுற
நிறைந்தன அதனில் நீடு வாழியவே.

குயில் 1–4–48

## பல்சரக்கு மூட்டை

பலசரக்கு மூட்டை எனக்குத் தூசித் 'தோழர்
விடுதலையிற் பன்னுளாய் வரைந்தவற்றை எல்லாம்
இலகுதனிச் சுவடி என அச்சி யற்றி யுள்ளார்
எல்லாரும் வாங்கிடுக இன்ப மிகக் கொள்க.
விலை சிறிதும் பெறுதலிலாப் பார்ப்பனரின் மூட்டை
வெறும்பதரே என்பதனைக் குத்திவெளிப் படுத்திச்
சலசலப்புக் கஞ்சாதீர் திராவிடரே என்று
சாற்று மிதைப் படிக்காமல் 'தள்ளிடுவார் உண்டோ?

குயில் 15–6–48

## பகுத்தறி வியக்கத்தின் பழமை

பகுத்தறி வியக்கத்தின் பழமை என்னும்
பனுவலினைச் சீவபந்து சீபால் தந்தே
மிகுந்தநலம் விளைத்துள்ளார் திராவிடர்க்கே!
மேனுளில் திரவிடரின் மேன்மை, சீர்த்தி
வகுக்கரிய நுண்ணறிவு வாழ்வின் நேர்மை
இவற்றையெலாம் பழநூலின் வாயிலாகத்
தொகுத் தளித்த அறிஞர்க்கு நன்றி! சீபால்
தூயவர்தாம் பல்லாண்டு வாழி நன்றே.

குயில் 15–8–48

## ராஜி நாமா

மிக நன்று மிக நன்று ராஜி நாமா
மிக்க இனி தான நடை! கதையமைப்பால்
தரும் ராச வேல் "அலுவ லகப்" படத்தைத்
தருகின்றார் நாட கத்து விருந்தி னர்க்கு
நகைச் சுவையாம் பொரிக் கறிக ளோடு; நெஞ்சம்
நடுக்கமுறும் இரக்கத்தை ஊட்டுகின்றார்
அகம்தெளிந்த எழுத் தாளர் இராச வேலர்
அத்தமிழ் நாட்டார் நன்றிக் குரியாரானார்.

## ஆணையேற்போம்

"ஆணையேற்போம்" ஆகுமோர் அரசியல்
பாடல் நூல் தன்னைப் பகர்ந்தார் தோழர்
நாராயணசாமி! ஊராள வந்த
காங்கிரஸ் ஆட்சியில் தாங்குயிர் நீத்த
தோழர்க் கிரக்கம் சொல்லும் வகையால்
மக்களை எழுச்சி தன்னில்
உய்க்கும் கருத்தால் உற்ற திந்நூலே.

குயில் 15-8-48



## பாரதிதாசன்

பாரதிதாசன் எதையும் ஆவேசத்தோடும், உணர்ச்சியோடும் பாடுபவர். கவிஞரின் சிந்தனையும் மொழியும் வாழ்க்கையை விரிவாக்குவன. கற்பனையும் யதார்த்தமும் கலையின் தொண்டுக்குப் பகுத்தறிவின் வழிக் கொண்டு வருபவர்.

பாரதி, பாரதிதாசனுக்குப் பழகு தமிழின் பண்பைக் காட்டினார். பாரதிதாசன் பழகுதமிழின் பாட்டில் பாட்டாளிகட்கும் உலக மக்கட்கும் சிந்தனைக் கனலை மூட்டினார். கலையை வாழ்க்கையின் வழிகாட்டியாக்கிய பெருமை புரட்சிக் கவிஞருக்கே உண்டு.

காதல், இயற்கை, சமூகம் பொதுவுடைமை எல்லாமே கவிஞரின் மொழியில் புத்துருக் கொள்கின்றன.



T185
R004A